Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 31 புதன்கிழமை (17-10-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:325

## ஓரணியாக ஒன்றுபட்டு நின்று தேர்தலை எதிர்கொள்வோம்!

### பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.17

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஒரு பொதுச் சின்னத்தின் கீழ் - ஓரணியாக நின்று - போட்டியிட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். எனவே தமிழர் நலனில் அக்கறை கொண்ட சகல சக்திகளும் தமக்குள் உள்ள வேறுபாடுகளை மறந்து ஒன்றுபடுமாறு கோருகின்றோம்.

யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் நேற்று விடுத்த ஓர் அறிக்கையில் இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் தொடர்பாக ஒரு தெளிவான நிலைப்பாட்டினை எடுக்க வேண்டிய நிலையில் குடாநாட்டு மக்களும் மாணவர்களும் தமிழ் மக்களின் நலனில் அக்கறையுள்ள தமிழ் கட்சியினரும் உள்ளனர்.

கடந்த காலங்களில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என தாமே தமக்கு முத்திரை குத்திக் கொண்டு நாடாளுமன்றம் சென்றவர்கள் ஆட்சிக்கு வந்த அரசாங்கத்துடன் சேர்ந்து தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றி நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக துயருறும் மக்களுக்கு அற்ப சொற்ப சலுகைகளைக் காட்டி அரசியல் லாபம் தேடுவதனையே ஒரே நோக்காகக் கொண்டு செயற்பட்டனர்.

இவ்வாறான சுயநலவாதிகள் மீண்டும் வெற்றிபெற்று நாடாளுமன்றம் செல்வதனை தடுக்க வேண்டிய கட்டாய தேவைப்பாடு எமக்குண்டு.

இவ்வாறான சுயநலம் கொண்ட கட்சிகள் தேர்தலில் வெற்றி பெறாது

(14 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழகத்தில் இன்று நிமலராஜனின் அஞ்சலி நிகழ்வு



யாழ்ப்பாணம்,ஒக்.17

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையுடன் ஓராண்டு நிறைவடைகிறது.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 19 ஆம் திகதி இரவு நிமலராஜன் யாழ்.நகரில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து ஆயுதபாணிகளால் கொல்லப்பட்டார்.

அவரது ஓராண்டு நினைவுதினத்தை ஒட்டி இன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நினைவு நிகழ்வு ஒன்று நடைபெறவிருக்கிறது.

நிமலராஜன் ஞாபகார்த்த அமைப்பு ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வு இன்று பிற்பகல் 2.30 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஆரம்பமாகும்.

நினைவுச் சுடர் ஏற்றலுடன் ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் நினைவுரைகள் இடம்பெறவுள்ளன.

பன்முகப் பார்வையில் நிமலராஜனின் (14 ஆம் பக்கம் பார்க்க)

## பொ.ஐ.முன்னணி வேட்பாளராக அர்ஜுன ரணதுங்கவும் களத்தில் குதிப்பார்?

கொழும்பு,ஒக்.17

இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் கடுவல தொகுதி அமைப்பாளராக அவரை நியமித்து தேர்தலில் போட்டியிட வைக்க முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் -

அர்ஜுன ரணதுங்க நேற்றுமுன்தினம் ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடி இருக்கிறார்.

இதேவேளை - அர்ஜுன தேர்தலில் போட்டியிட்டால் அவருக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட இந்தியக் கிரிக்கெட் அணியின் இரு வீரர்கள் இலங்கை வருவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாகத் தெரிய வருகிறது. (ஐ-3)

## புலிகளின் தாக்குதல்கள் வெலிஓயாவில் அதிகரிப்பு!

### திங்களன்று இரு சம்பவங்களில் படையினர் மூவர் உயிரிழப்பு

கொழும்பு,ஒக்ரோபர்17

**வெலிஓயா (மணலாறு) பகுதியில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருவதை அடுத்து அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

**கடைசியாக நேற்று முன்தினம் பராக்கிரமபுர பகுதியில் புலிகள் நடத்திய இரு வேறு தாக்குதல்களில் படையினர் தரப்பில் மூவர் பலியானதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.**

வெலிஓயா பராக்கிரமபுரவில் நேற்று முன்தினம் காலை 8 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர் கண்ணித் தாக்குதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டதாகவும் -

அதேதினம் காலை 9 மணியளவில நெலும்வெவ பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம்பெற்ற மோதலில் சிப்பாய்கள் இருவர் கொல்லப்பட்டதாகவும் ஒருவர் காயமடைந்ததாகவும் விசேட ஊடகத் தகவல் நிலையம்

(14 ஆம் பக்கம் பார்க்க)

### சிஹல உறுமயவும் யாழ்ப்பாணத்தில் போட்டியிடும்

கொழும்பு,ஒக்.17

எதிர்வரும் தேர்தலில் 'சிஹல உறுமய' கட்சி யாழ்.மாவட்டத்தில் போட்டியிட இருப்பதாக அந்த அமைப்பின் தேசிய அமைப்பாளர் சம்பிக ரணவக்க தெரிவித்திருக்கிறார்.

கடந்த தேர்தலில் யாழ்.மாவட்ட மக்களில் 218 பேர் எமது கட்சிக்கு வாக்களித்துள்ளனர். அங்கு கூட எமது கட்சிக்கு வாக்கு அளிக்க மக்கள் தயாராக இருப்பதால் நாம் போட்டியிட முடிவு செய்துள்ளோம் என்று அவர் தெரிவித்தார். (ஐ-3)

### 3 படையினர் காயம்

கொழும்பு, ஒக்.17

வவுனியா நகருக்கு வடமேற்கே இரணைஇலுப்பைக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் ரோந்து வந்த படையினருக

(14 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழ்க் காங்கிரஸ் - தமிழ்க் கட்சிகளின் நேற்றைய பேச்சுக்கள் இணக்கமின்றி முடிவு!

கொழும்பு,ஒக்.17

தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, ஈபிஆர்.எல்எவ் (சுரேஷ் அணி) ஆகியன இணைந்து உருவாக்கியுள்ள கூட்டமைப்பில் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் இணைந்துகொள்வது குறித்து நேற்று உடன்பாடு காணப்படவில்லை.

இந்தக் கூட்டணியில் இணைந்து போட்டியிட அகில இலங்கைத் தமிழ்க காங்கிரஸ் இணக்கம் தெரிவித்துள்ள போதிலும் -

தமிழர் விடுதலைக் கூட்டணியின 'உதயசூரியன்' சின்னத்தில் போட்டியிடுவதற்கு காங்கிரஸ் தொடர்ந்தும் மறுத்துவருவதால் சமரசநிலை எட்டப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

கூட்டமைப்பை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள பிரமுகர்கள் காங்கிரஸ் கட்சிப் பிரதிநிதிகளுடன் நேற்றுப் பேச்சு நடத்தியபோதும் அதில இணக்கம் காணப்படாததால் இன்று மீண்டும் பேச்சுக்கள் தொடர்ந்து நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

### திஸநாயக்காவின் வீட்டின் மீது பறந்த ஹெலி

கொழும்பு,ஒக்.17

முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா தனது சொந்த ஊரான ஹிங்குராங்கெத்தவில் புதிதாக நிர்மாணித்த இல்லத்தை ஜனாதிபதி செயலக அதிகாரிகள் ஹெலி மூலம் படம் எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தனது வீட்டின் மீது பதினொரு தடவைகள் பறந்த விமானப்படை ஹெலி ஒன்று வீட்டைப் படம் எடுத்ததாக திஸநாயக்கா தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி செயலக அதிகாரிகள் அந்தப் படங்களைப் பத்திரிகைகளுக்கு வழங்கியிருக்கின்றனர்.

திஸநாயக்கா இந்த நவீன

(14 ஆம் பக்கம் பார்க்க)

### அமெரிக்க விமானங்கள் கொடூரம்: காபூலில் செஞ்சிலுவை பணிமனை தாக்கப்பட்டது!

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் அமைந்திருந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பணிமனை நேற்று அமெரிக்க விமானங்களின் குண்டு வீச்சுக்கு இலக்காகித் தீப்பற்றி எரிந்தது.

தாக்குதல் நடந்த சமயம் அங்கு செஞ்சிலுவைப் பிரதிநிதிகள் எவரும தங்கியிருக்கவில்லை. அவர்கள் பாதுகாப்புக்கருதி பாகிஸ்தானில் தங்கியுள்ளனர்.

ஆனால் அங்கு பணிபுரியும் ஆப்கன் பிரஜை ஒருவர் இத் தாக்குதலினால் படுகாயமடைந்தார். காபூலில் செஞ்சிலுவை அலுவலகமும் அது அமைந்திருக்கும் வளாகமும் நன்கு தெளிவாக அடையாளப்படுத்தப்பட்டிருந்ததாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அறிவித்திருக்கிறது.

ஐநாவின் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் அலுவலகம் மீது நடத்தப்பட்ட வான் தாக்குதலில் அங்கு பணியாற்றிய ஆப்கன் பிரஜைகள் நால்வர் பலியான சம்பவம் நடைபெற்ற இருவார காலத்துக்குள் காபூலில் செஞ்சிலுவைப் பணிமனை மீதும் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

இந்தத் தாக்குதல் தொடர்பாக அமெரிக்கா உடனடியாகக் கருத்து எதனையும் வெளியிடவில்லை.

### வெள்ளி, சனி இரு தினங்களும் அரசு, புலிகள் யுத்தநிறுத்தம்

#### 'போலியோ' மருந்து வழங்குவதை ஒட்டி

வடக்கு - கிழக்கில் எதிர்வரும் சனிக்கிழமை குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப் படுவதை ஒட்டி அன்றைய தினமும் அதற்கு முதல் நாள் வெள்ளிக்கிழமையும் யுத்தநிறுத்தம் மேற்கொள்ள இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் இணங்கியிருக்கின்றனர்.

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம (யுனிசெவ்) இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

இந்தத் தினங்களில் யுத்தநிறுத்தம் செய்யுமாறு தமது அமைப்பு விடுத்த கோரிக்கையை இரு தரப்பும் ஏற்றுக் கொண்டுள்ளதாக 'யுனிசெவ்' தெரிவித்தது.

சிறுவர்கள் சமாதானத்தின் சரணாலயங்கள். யுத்தத்தின் விளைவுகளில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டிய உரிமையுள்ளவர்கள் என்பதையும் -

யுத்த நடவடிக்கைகளில் அவர்களை உபயோகிக்கக்கூடாது என்பதையும் -

இதன் மூலம் இருதரப்பும் ஏற்று அங்கீகரித்துள்ளன. இது ஒரு முன்னோடி நடவடிக்கையாக அமைந்துள்ளது - என்று 'யுனிசெவ்' அமைப்பு தெரிவித்துள்ளது. (ஐ-3)

பெற்றோர்களே!

உங்கள் குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு சொட்டுமருந்து கொடுக்கும் தினம் (20.10.2001) சனிக்கிழமை

மறந்துவிடாதீர்கள்!!

MANKIND IS OUR BUSINESS

PolioPlus Rotary International

- யாழ். றோட்டறிக் கழகம்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்




யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள ஜேர்மன் நாட்டுப் பிரதித்தூதர் ஹெயின் கொப் நேற்று யாழ்.மாநகரசபைக்கு விஜயம் செய்தார். பின்னர் நல்லூர் ஜனசக்தி சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டார். அந்த வைபவத்தில் கலந்து கொள்வதற்காக பிரதித் தூதரும், யாழ்.மேயர், பிரதிமேயர் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள் ஆகியோர் மேளவாத்தியங்களுடன் அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும், நல்லூர் அரசடி ஜனசக்தி சனசமூக நிலையத்தில் ஜேர்மன் பிரதித் தூதர் மங்களவிளக்கேற்றுவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். ஆசிய பவுண்டேசன் நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரியான டாக்டர் சலசாவும் இந்த வைபவத்தில் கலந்துகொண்டார். (ஜ-10) (படம்: கொனிகா கலர் லாப்)

## ஊக்குவிப்பு கொடுப்பனவு

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான இவ்வாண்டு ஜூன், ஜூலை மாதங்களுக்குரிய ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தில் வழங்கப்படவுள்ளன.

உரியவர்கள் தமது கொடுப்பனவுகளை அன்றைய தினம் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஜ-180)

## சுயேச்சைக்குழு கட்டுப்பணம் செலுத்தியது

எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவதற்கு முதலாவது சுயேச்சைக் குழு கொழும்பு மாவட்டத்தில் நேற்று கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

ரணவீர பந்துல சுனில் என்பவரை முதன்மை வேட்பாளராகக் கொண்டு இந்தக் குழு போட்டியிடவிருக்கின்றது. (ஜ-3-4)

# ஜேர்மன் பிரதித் தூதர் நேற்று யாழ். வருகை

யாழ்ப்பாணம்,ஒக்.17

இலங்கைக்கான ஜேர்மன் நாட்டுப் பிரதித் தூதர் ஹெயின் கொப் மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

நேற்றுக் காலை இங்கு வந்த அவர் பிற்பகல் 4 மணியளவில் நல்லூர் அரசடிப் பகுதியில் உள்ள ஜனசக்தி சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு ஜேர்மன் நாட்டுப் பிரஜைகளால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட 4 தையல் இயந்திரங்களை பயனாளிகளுக்குக் கையளித்தார்.

இந்த நிகழ்வில் மாநகரசபையின் முதல்வர் ந.ரவிராஜ், ஆணையாளர் இ.இராமலிங்கம், பிரதிமேயர் செ.கந்தையன் மற்றும் மாநகரசபையின் உறுப்பினர்கள், ஆசிய பவுண்டேசன் அதிகாரி டாக்டர் சலசா, ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் யாழ். மாவட்டப் பொறுப்பதிகாரி சல்பா, நீர் விநியோகத் திட்டத்தின் பொறியியலாளர் கருவரட்ணராஜா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்விற்கு முன்பாக பிற்பகல் 3 மணியளவில் கோண்டாவிலில் உள்ள குடிதண்ணீர் விநியோக நிலையத்தை பிரதித்தூதர் பார்வையிட்டார். பின்பு மாலை 4.45 மணியளவில் யாழ்.ஆயர் இல்லத்துக்கும் சென்று கலந்துரையாடினார். (ஜ-10-9)

# நிவாரண உணவுப் பொருள்களின் பணப் பெறுமதி அதிகரிக்கப்படும்

## ஈ.பி.டி.பி. அமைப்பு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.17

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் உலர் உணவு நிவாரணப் பொருள்களின் பணப் பெறுமதியை ஆயிரத்து 200 ரூபாவில் இருந்து 3ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக ஈ.பி.டி.பியின் யாழ்மாவட்ட அமைப்பாளர் கே.வி.குகேந்திரன் (ஜெகன்) தெரிவித்திருக்கிறார்.

நிவாரணப் பொருள்களின் பணப் பெறுமதியை அதிகரிப்பது தொடர்பான பிரேரணை வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் அங்கீகாரத்துக்கு விடப்பட்டிருப்பதாகவும் -

இன்னும் சில தினங்களில் இது தொடர்பான முடிவு எடுக்கப்படும் என்றும் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை -

நிவாரணம் பெறுவோரின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காகத் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டுவரும் மீளாய்வுப் பணிகள் மறுஅறிவித்தல் வரை நிறுத்தப்பட்டிருப்பதாகவும் கே.வி.குகேந்திரன் தெரிவித்திருக்கிறார். (ஜ)

# 2ஆம் கட்டக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஒக்.17

வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் முதற்கட்டத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் மிகுதிப் பணத்தைப் பெற ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக ஈ.பி.டி.பி.விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிகுதிப் பணத்தைப் பெறுவதற்காக அந்தந்த பிரதேச செயலகம், பிரதேச சபைகள், திணைக்களங்கள் ஊடாகத் தொடர்புகொள்ளும்படி யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் பிரதம அமைப்பாளருமான கே.வி. குகேந்திரன் (ஜெகன்) கேட்டுள்ளார்.

அபிவிருத்தித்திட்டங்களின் கீழ் முதற்கட்டமாக நிதிஒதுக்கீடு பெற்றவர்கள் குறிப்பிட்ட திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் தொடர்பான விவரங்களுடன் வடக்கின் அபிவிருத்தி அதிகார சபையினருடன் தொடர்புகொண்டு மீதித் தொகையினைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஜ)

## முயல் இறைச்சி எனக் கூறி மோசடி

# பூனையைக் கொன்று அதன் இறைச்சியை விற்றவர் கைது!

தென்மராட்சி,ஒக்.17

பூனையைக் கொன்று அதன் இறைச்சியை முயல் இறைச்சி எனக் கூறி நெல்லியடி மீன் சந்தையில் விற்பனை செய்ய முயன்றதாகக் கூறப்படும் நபர் ஒருவரைப் பொலீஸார் நேற்றுக் கைது செய்திருக்கின்றனர்.

பூனையைக் கொன்று அதன் தலையையும், தோலையும் மறைத்துவிட்டு இறைச்சியினை விற்பனை செய்ய முயன்றதாகவும் -

அவ்வேளை மறைவிடத்தில் கிடந்த பூனையின் தலை, தோல் என்பவற்றை நாய் ஒன்று வெளியே இழுத்து வந்தபோது இந்த மோசடி அம்பலத்துக்கு வந்ததாகவும் கூறப்படுகிறது.

பூனையைக் கொன்ற நபரை நெல்லியடிப் பொலீஸார் கைது செய்துள்ளனர். (ஜ-117)

# கைகலப்பு தொடர்பாக விசாரணை

யாழ்ப்பாணம்,ஒக்.17

யாழ்பல்கலைக்கழக முகாமைக் கற்கைகள் வணிக பீடத்தின் சிரேஷ்ட மாணவர்களுக்கும் 2 ஆம் வருட மாணவர்களுக்கும் இடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற கைகலப்புத் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி எம். நடராஜசுந்தரம் தெரிவித்தார்.

விசாரணைகளின் பின்பு குற்றம் இழைத்தவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

முகாமைக் கற்கைகள் வணிக பீட மாணவர்களுக்கான விரிவுரைகள் யாவும் நேற்று வழமைபோன்று இடம்பெற்றன.

நேற்று முன்தினம் இடம்பெற்ற கைகலப்பில் 2 ஆம் வருட மாணவனான மு.ஆரூரன் என்ற மாணவன் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே. (ஜ-10-ரி)

# யாழ்ப்பாணத்தில் மின் நிலையம் அமைக்க அரசு அங்கீகாரம்

யாழ்ப்பாணம்,ஒக்.17

யாழ்ப்பாணத்தில் 42 மெஹா வாட்ஸ் சக்தி கொண்ட மின்சக்தி நிலையம் ஒன்று அமைக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக ஈ.பி.டி.பி. அமைப்பு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கிய சிபார்சை ஏற்று அமைச்சரவை இந்த ஒப்புதலை அளித்துள்ளது என்றும் -

இந்த மின் நிலையம் அமைக்கப்படுமானால் குடாநாட்டின் சகல பகுதிகளுக்கும் 24 மணி நேரம் மின் விநியோகத்தை வழங்க வாய்ப்புக் கிட்டும் என்றும் -

அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-3)

# இளைஞர் தாக்கப்பட்டு படுகாயம்

யாழ்ப்பாணம்,ஒக்.17

சீருடையினரால் வாகனம் ஒன்றில் அழைத்துச் செல்லப்பட்டுத் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவர் பலத்த காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்.

நேற்று முன்தினம் மாலை யாழ். மனோகராச் சந்திப் பகுதியில் வைத்து வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட்ட இவர் பின்னர் கடுமையாகத் தாக்கப்பட்டுக் காயமடைந்த நிலையில் நேற்று அதிகாலை அதே இடத்தில் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருநெல்வேலிப் பகுதியில் தையல் கடை ஒன்றில் பணிபுரிந்து வந்த கட்டப்பிராயைச் சேர்ந்த தங்கராசா ஜெகநாதன் (வயது 23) என்பவரே தாக்கப்பட்டவராவார். (ஜ-4-15)

# லண்டனில் வெள்ளியன்று நிமாலுக்கு அஞ்சலிக் கூட்டம்

லண்டன்,ஒக்.17

பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் முதலாவது ஆண்டு நினைவு தினக் கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை லண்டனில் இடம்பெறவுள்ளது.

பி.பி.ஸி. சிங்கள சேவையின் ஆசிரியர் பிரியந்த லியனகே தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில், பி.பி.ஸி.நிறுவனத்தைச் சேர்ந்த ஜெர்மி, போவன், மார்க்தொம்சன் மற்றும் வெரோனிகாவோர்லூட் ஆகியோர் பிரதான பேச்சாளர்களாகக் கலந்து கொள்கின்றனர்.

இது தொடர்பாக கூட்டத்தின் ஏற்பாட்டாளர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நிமலராஜனின் படுகொலை நிகழ்ந்து ஒரு வருடமாகிறது. யுத்த பூமியான யாழ்.குடாநாட்டிலிருந்து ஒலித்த ஒரே சுதந்திரக் குரலான நிமலராஜன் கடந்த ஆண்டு ஒக்ரோபர் 19ஆம் திகதி இலங்கை நேரப்படி இரவு 10 மணியளவில் கொல்லப்பட்டார். அவர் கொலை செய்யப்பட்ட சமயத்தில் அவர் வாழ்ந்த பகுதியில் அரசு விதித்த ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டு ஒரு வருடம் முடியும் நிலையில, அந்தக் கொடுஞ்செயலைச் செய்தவர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. சந்தேக நபர்களின் பெயர்கள் கூட வெளியிடப்படவில்லை.

இந்தத் தகவல்கள் நிமலராஜன் நினைவு தினக்கூட்டத்தில் கலந்து கொள்ள தங்களை ஈர்க்கும் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-ஓ)


சுடர் ஒளி

21-10-2001 இதழில்

- 'ஓயாத அலைகள்' வெளிவராத தகவல்கள்
- எல்லாளன் படை தமிழ் கட்சிகளுக்கு எச்சரிக்கை
- அரசியல் நெருக்கடிகளும் நாடாளுமன்றக் கலைப்புகளும்
- புலிகளின் இலக்கில் சிக்கிய விமானப்படை முகாம்
- இளைஞர் ஆள்சேர்ப்பின் விளைவை உணர்த்தும் யாழ் துப்பாக்கிச் சூடு
- மினகாவை அலாக்க தலைவை கொடுத்துப் பழகிய பாம்பரை
- பந்தலிலே பாகற்காய் பார்க்கும் தமிழ்க் கட்சிகள்
- கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஒழுக்கக் கேடுகள்

மற்றும் அரசியல் அம்பலம், கவிதைச் சமர், சிறுகதை, இலவச மருத்துவ ஆலோசனை உட்பட பல அம்சங்கள்

வாசிக்கும் நெஞ்சங்களை யோசிக்க வைக்கும் ஒரே ஒரு பத்திரிகை

(C18746)



வாழ்த்துகின்றோம்



யா/கொக்குவில்
ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை மாணவி
செல்வி
[illegible]

5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 141 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தமையையிட்டு அவரைப் பாராட்டுவதுடன் நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(C/18739)

# ஆப்கானிஸ்தானில் தலிபானின் ஆயுதக்கிடங்குகள் அழிப்பு!

வாஷிங்ரன்,ஒக்.17

ஆப்கானிஸ்தானில் ஆளும் தலிபான்கள், காபூலில் ஆயுதங்களையும் வெடிப்பொருள்களையும் சேமித்து வைத்திருந்த இரு குகைகளை நேற்று லேசர் குண்டுகளைப் பயன்படுத்தி நிர்மூலமாக்கியதாக அமெரிக்கா அறிவித்தது. இப்பகுதியில் தொடர்ந்து நாலுமணி நேரம் குண்டுவெடிப்புச் சத்தங்கள் கேட்டதாகவும் - ஆயுதக்கிடங்கு பற்றி எரிந்ததை இது ஊர்ஜிதப்படுத்துவதாகவும் பென்டகன் அதிகாரி ஒருவர் கூறினார்.

நேற்றுப் பத்தாவது நாளாக அமெரிக்கா மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையில் தலிபான் தலைவர் முல்லா மொஹமட் ஒமரின் வீடு மற்றும் மூன்று இராணுவ நிலைகள் ஆகியவற்றை அமெரிக்க விமானங்கள் குண்டுவீசித் தாக்கின.

இதேவேளை -

தெற்கு கந்தகாரில் நிலைகொண்டிருந்த தலிபான்களின் 55ஆவது படையணி மீது அமெரிக்கக் கொமாண்டோப் படைகள் ஹெலிகள் மூலம் தரையிறங்கித் தாக்குதல் நடத்திவிட்டுத் திரும்பியதாகக் கூறப்படுகிறது.

தலிபான்களின் 55ஆவது படையில் அரபு நாடுகளைச் சேர்ந்தவர்களே பெரும்பான்மையாக அங்கம் வகித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

# துறவிகள் வாழ்ந்த குகையில் ஒஸாமா பின்லேடன் தஞ்சம்?

பெஷாவர்,ஒக்.17

பௌத்த, சமண முனிவர்கள் தவமிருந்த குகைகளே தற்போது இஸ்லாமியத் தீவிரவாதியான ஒஸமா பின்லேடனுக்கும் அவரது ஆதரவாளர்களுக்கும் மறைவிடமாக இருப்பதாக கூறப்படுகிறது.

ஆப்கானிஸ்தானின் 'பமியான்' பகுதி முன்பொரு காலத்தில் பௌத்த, சமணத் துறவிகள் வாழ்ந்த இடமாகும். சில மாதங்களின் முன்னர் தலிபான்கள் இடித்துத் தள்ளி பரபரப்பை ஏற்படுத்திய 'பமியான்' புத்தர் சிலைகளும் இங்குதான் இருந்தன.

இப்பிரதேசத்தில் செங்குத்தாக உயர்ந்து பல மைல்களுக்கு நீண்டு செல்லும் மலைகளின் மத்திய பகுதியில் இயற்கையாகவும், செயற்கையாகவும் அமைந்த குகைகள் ஆயிரக் கணக்கில் உள்ளன.

செங்குத்தான மலைகளில் பாறைகளைப் பிடித்து ஏறும் துறவிகள், இந்தக் குகைகளில் பாதுகாப்புடன் தியானத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

அந்தக் குகைகளிலேயே பின்லேடனும் அவரது ஆதரவாளர்களும் தற்போது மறைந்திருப்பதாகக் கருதப்படுகிறது. (ஒ)

## காபூலில் சில காட்சிகள்



சேதமடைந்த தமது வீட்டைப் பார்வையிடும் ஆப்கானியக் குடும்பம்.



சிதைந்துபோன ஆப்கானியக் கிராமம் ஒன்று.



அகதிமுகாமுக்கு வெளியே விளையாடும் குழந்தை.



கடந்த வெள்ளிக்கிழமையன்று மசூதியில் தொழுகையின் பின்னர் வறியவர்களுக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன.



டாங்கியின் மீது விமான எதிர்ப்பு ஏவுகணையுடன் அமெரிக்க விமானங்களை எதிர்நோக்கும் தலிபான்கள்.

### கடந்த ஐந்து நாள்களாகத் தொடரும்

# நைஜீரிய மதக் கலவரங்களில் இதுவரை 200 பேர் உயிரிழப்பு!

## தேவாலயங்கள், மசூதிகள் தீக்கிரை

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் தலிபான்கள் மற்றும் ஒஸாமா பின்லேடனை ஆதரித்தும், ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்கத் தாக்குதலைக் கண்டித்தும் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் மதக்கலவரமாக மாறியதில், சுமார் 200பேர் வரை உயிரிழந்தனர்; தேவாலயங்களும், மசூதிகளும் தீக்கிரையாக்கப்பட்டன.

வடபுற நகரான கனோய்யில் கடந்த வெள்ளிக்கிழமை தொழுகையின் பின்னர் முஸ்லிம்கள் அமெரிக்க எதிர்ப்பு ஊர்வலம் நடத்தினர். அப்போது ஊர்வலத்தில் சென்றவர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டது.

இதனையடுத்து கடந்த ஐந்து நாள்களாக அங்கு மதக்கலவரம் மூண்டுள்ளது. இந்த மதக்கலவரங்களில் இதுவரை 18பேர் மட்டுமே உயிரிழந்ததாக நைஜீரியா அரசு தெரிவித்துள்ளது.

ஆனால் கனோய் நகர வீதிகளில நூற்றுக்கணக்கான சடலங்கள் கிடப்பதாகவும்- வன்முறைகள் தொடர்வதால், அந்தச் சடலங்கள் அப்புறப்படுத்தப்படாமல் ஆங்காங்கே கிடப்பதாகவும் - கனோய்யில் உள்ள செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை -

தற்போதைய மதக்கலவரங்களைப் பற்றி பெரிதாகக் கவலைப்பட ஒன்றுமில்லை என்று நைஜீரிய அதிபர் ஒலிசேன் ஒபசன்யோ தெரிவித்ததுடன், மேலதிகப் பாதுகாப்பு ஏற்பாடுகள் தேவையில்லை என்றும் கூறியுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதத்திலும், நைஜீரியாவில், மதக்கலவரங்கள் பல உயிர்களைப் பலி கொண்டது குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

### புகழ்பெற்ற காதல் சின்னமான

# தாஜ்மகாலை சேதப்படுத்த பா.ஜ.க. தொண்டர்கள் முயற்சி!

### பொலீஸார் தலையிட்டுத் தடுத்தனர்

ஆக்ரா,ஒக்.17

புகழ்பெற்ற காதல் சின்னமான தாஜ்மகாலை சேதப்படுத்த பாரதீய ஜனதாக்கட்சித் தொண்டர்கள் முயற்சித்ததாகக் கூறப்படுகிறது.

உத்தரப்பிரதேச மாநிலம் ஆக்ராவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பாரதீய ஜனதாக்கட்சியின் இளைஞர்கள் மாநாட்டில் கலந்துகொண்டவர்களே இந்த வன்முறை முயற்சியில் ஈடுபட்டதாக பொலீஸார் தெரிவித்தனர்.

மாநாட்டில் கலந்துகொண்ட பா.ஜ.க. இளைஞரணியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானவர்கள், ஆக்ராவில் உள்ள தாஜ்மகாலுக்குச் சென்றதாகவும் -

அவர்கள், அங்கிருந்த பூந்தொட்டிகள் உட்பட அலங்காரச் சின்னங்களை உடைத்தெறிந்துகொண்டு தாஜ்மகாலை நோக்கி முன்னேறியதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து தாஜ்மகால் வளாகத்துக்கு விரைந்த பொலீஸார், கலவரக்காரர்களைக் கட்டுப்படுத்திய போது மோதல்கள் வெடித்தன.

இந்த மோதலில் பொலீஸார் பலர் காயமடைந்தபோதும், தாஜ்மகாலைத் தகர்க்கும் முயற்சி முறியடிக்கப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

வெள்ளைப்பளிங்குக் கற்களால் உருவான தாஜ்மகால், இஸ்லாமிய மன்னனான ஷாஜகானால், தனது காதலி மும்தாஜின் நினைவாகக் கட்டப்பட்டது என்பதும் -

அயோத்தியில் ராமபிரான் பிறந்ததாகக் கருதப்படும் இடத்தில் அமைந்திருந்த பாபர் மசூதியை முன்னர் பா.ஜ.க. உட்பட இந்துத்துவ அமைப்புகள் இடித்துத் தரைமட்டமாக்கியதும் -

குறிப்பிடத்தக்கவை. (ஒ-4)

### ஐரோப்பிய நாடுகளின் மீது

# நச்சு வாயுத் தாக்குதல் நடத்த முஸ்லிம் தீவிரவாதிகள் திட்டமாம்

ரோம்,ஒக்.17

ஐரோப்பாவில் நச்சு இரசாயன வாயு மூலம தாக்குதலை மேற்கொள்ள ஒசாமா பின்லேடனின் ஆதரவு பெற்ற இஸ்லாமியத் தீவிரவாதிகள் திட்டமிட்டிருப்பதாக இத்தாலியப் பொலீஸார் தெரிவித்தனர்.

இத்தாலியில் தங்கியுள்ள சந்தேகத்துக்குரிய சிலரின் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட்டபோதே இந்தச் சதித் திட்டம் குறித்துத் தெரியவந்ததாகப் பொலீஸார் கூறினர்.

இத்தாலியில் கடந்தவாரம் கைது செய்யப்பட்ட கென்ய நாட்டவர் ஒருவர் இந்தச் சதி தொடர்பாக பல தகவல்களை வெளியிட்டதாகவும் -

அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட இரகசிய ஆவணங்கள் மூலம் அல் கெய்டா அமைப்புக்கு இந்தச் சதியில் உள்ள தொடர்பு தெரியவந்துள்ளதாகவும் - பொலீஸார் மேலும் கூறினர்.

ஆயினும் இரசாயன வாயுத் தாக்குதல் திட்டம் பற்றி பொலீஸார் விவரங்கள் எதனையும் வெளியிடவில்லை. (ஒ-4)

# உள்ளூராட்சித் தேர்தல் தமிழகத்தில் ஆரம்பம்

தமிழ்நாட்டில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களின் முதற்கட்ட வாக்கெடுப்பு நேற்று நடத்தது.

வாக்குச்சாவடிகளைக் கைப்பற்றியதாக தி.மு.கவும் அ.தி.மு.கவும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டிய போதிலும் பெரும்பாலும் வாக்குப் பதிவு அமைதியாகவே நடந்ததாகக் கூறப்படுகிறது.

# பலஸ்தீன 'ஹமாஸ்' அமைப்பினர் மீது இஸ்ரேல் தொடர் தாக்குதல்கள்

காஸா,ஒக்.17

மேற்குக்கரைப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கார்க் குண்டு வெடிப்பில் ஒருவர் கொலலப்பட்டார்.

மேற்குக்கரையின் டல்லூஸ் நகரில், பலஸ்தீனத்தலைவர் யஸீர் அராபாத்தின் 'பதாஹ' இயக்க அலுவலகத்தின் அருகே காலை வேளையில இந்தக் குண்டுவெடிப்பு நிகழ்ந்தது.

பலஸ்தீன 'ஹமாஸ்' தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த அஹமட் மசூர் என்பவரே இந்தக் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, மேற்குக்கரையின் மற்றொரு பகுதியில், 'ஹமாஸ்' இயக்கத்தின் முக்கிய தலைவரான அப்துல் ரஹ்மான் கமாத், அவரது வீட்டில் வைத்து இஸ்ரேல் படையினரால் கொல்லப்பட்டார். 'ஹமாஸ்' அமைப்பின் மீதான தொடர் தாக்குதல்கள் குறித்து கருத்துத் தெரிவித்த இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன், இஸ்ரேலில் இடம்பெற்ற வெடிகுண்டுத் தாக்குதல்களுக்குக் காரணமான 'ஹமாஸ்' மீதான தாக்குதல்கள் 'ஆரம்பமுமல்ல, முடிவுமல்ல' என்று கூறியுள்ளார். (ஒ-4)

# கென்யாவில் ஆர்ப்பாட்டம்

நைரோபி,ஒக்.17

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா மேற்கொண்டுவரும் தாக்குதலைக் கண்டித்து கென்யாவில் கடந்த வெள்ளிக்கிழமை எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

## முக்கிய அறிவித்தல்

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

**கிராமியவங்கி மீதிகளை உறுதிப்படுத்துதல்**

மேற்படி சங்கத்தில் 31 - 05 - 2001 இற்கான கிராமிய வங்கிகளின் கணக்கு மீதிகள் கணக்காய்வாளர்களால் உறுதிப்படுத்தப்பட இருப்பதனால் குறிப்பிட்ட கிராமிய வங்கியில் கணக்குகளை வைத்திருப்போர் தங்கள் கையேடுகளைச் சமர்ப்பித்து கணக்கு மீதிகளை 15 - 11 - 2001 இற்கு முன் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ம. சற்குணசிங்கம்
தலைவர்,
சங்கானை ப.நோ.கூ.சங்கம்,
சங்கானை.

(சி/18717)


# கரவெட்டி பிரதேச அபிவிருத்திக்கு 11 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி, ஒக். 17

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள இவ்வருடத்திற்குரிய பன்முகப்படுத்தப்பட்டவரவு-செலவுத் திட்ட நிதியில் பத்து லட்சத்து 90 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதி ஒதுக்கீட்டிலிருந்து பின்வரும் வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கரணவாய் அந்திரான் சந்திரோதயா சனசமூக நிலையத்திற்கு புதிய கட்டடம் அமைக்க ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும்— கரவெட்டி திருஇருதய சனசமூக நிலையத்திற்கு புதிய கட்டடம் அமைக்க ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபாவும் — கரணவாய் கிழக்கு வளர்மதி சனசமூக நிலையக் கட்டடம் அமைக்க ஒரு லட்சம் ரூபாவும் —

மூதலைக்குளி கிருஷ்ணா சனசமூக நிலையம் — துன்னாலை அல்லையம்பதி ஸ்ரீமுருகன் சனசமூக நிலையம் ஆகியவற்றுக்குத் தளபாடம் கொள்வனவு செய்ய தலா ஒரு லட்சம் ரூபாவும், கரணவாய் தெற்கு வள்ளுவர் சனசமூக நிலையத்திற்கு தளபாடம் கொள்வனவு செய்வதற்கு 75 ஆயிரம் ரூபாவும் —

வல்வெட்டித்துறை சமரபாகு பராசக்தி சனசமூக நிலைய கட்டடத் திருத்த வேலைக்கு 50 ஆயிரம் ரூபாவும், கரணவாய் சோளங்கன் சனசமூக நிலையத்திற்கு குழாய்க் கிணறு அமைக்க 50 ஆயிரம் ரூபாவும், உடுப்பிட்டி நாற்சதுர அபிஷேக சபைக் கட்டடத்திற்கு மின் இணைப்பு வழங்க ஒரு லட்சம் ரூபாவும் —

கரவெட்டி கிழக்கு நாமகள் சனசமூக நிலையத்திற்கு தொலைக் காட்சிப்பெட்டி கொள்வனவு செய்வதற்கு 75 ஆயிரம் ரூபாவும், வல்வெட்டித்துறை சூரிகோயிலடி சூரிசக்தி சனசமூக நிலையக் கட்டடத் திருத்த வேலைக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[க-117]

## கூட்டுறவுக் கிராமிய வங்கியை வடமராட்சியில் இயங்கவைக்குக

### பச்சிலைப்பள்ளி மக்கள் கோரிக்கை

வடமராட்சி, ஒக். 17

பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமையகத்தையும், கிராமிய வங்கியையும் வடமராட்சியில் இயங்க வைக்குமாறு பச்சிலைப்பள்ளி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடமராட்சிப் பகுதியிலேயே பச்சிலைப்பள்ளியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களில் பெரும் பகுதியினர் வசித்து வருகின்றனர். இவர்கள் கிராமிய வங்கியில் தமது கருமங்களை மேற்கொள்ளக் கொக்குவிலில் இயங்கி வரும் பச்சிலைப்பள்ளிப் பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கிராமிய வங்கிக்கு இருபஸ்களை எடுத்துச் செல்லவேண்டியுள்ளது. அத்துடன் காலநேரமும் வீணடிக்கப்படுகிறது.

இதன் காரணமாகக் கூட்டுறவுச் சங்கத்தையும், கிராமியவங்கியையும் வடமராட்சிப் பகுதியில் இயங்கவைத்தால் பயனுள்ளதாகவும், மக்கள் சிரமங்களைக் குறைக்கக் கூடியதாகவும் இருக்கும் என அக் கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-173)


## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
14
—
01
—
1925



உதிர்வு:
26
—
09
—
1995

**அமரர் இராமலிங்கம் இரத்தினசிங்கம்**

அன்பின் உருவமே!
பாசத்தின் இருப்பிடமே!
பண்பின் உறைவிடமே!
நேசமுடன் எம்மை வளர்த்து,
தேசம் புகழ வைத்த - எம்
அன்பு அப்பாவே - இந்நாளில்
உம்மை நினைவு கூருகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

டச்றோட்,
உடுவில்.

(93502)


## யோகாசன கண்காட்சி

வடமராட்சி, ஒக். 17

குடத்தனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் மாணவர்களின் உடல், உளமேம்பாடு நலன்கருதி இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தும்பளை யோகா மார்ஷல் ஆட்ஸ் கிளப்பின் யோகாசன கண்காட்சி அதிபர் க. யோகநாதன் தலைமையில் நடைபெறும். (173)

## உருளைக்கிழங்கு விலை வீழ்ச்சி

அரியாலை, ஒக். 17

யாழ். நகரில் உருளைக்கிழங்கின் விலை திடீரென வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த வாரங்களில் கிலோ 240 ரூபாவாக விற்கப்பட்ட உருளைக்கிழங்கு தற்போது கிலோ 70ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது.

கொழும்பில் இருந்து கப்பல் மூலம் உருளைக்கிழங்கு எடுத்து வரப்பட்டதாலேயே கிழங்கின்விலைவீழ்ச்சியடைந்துள்ளதாக காரணம் தெரிவிக்கப்பட்டது.

(க-17)

## மோ.சைக்கிள் அபகரிப்பு

வலிகாமம்தெற்கு, ஒக். 17

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற புரட்டாதிச் சனிக்கிழமை ஆலய வழிபாட்டுக்குச் சென்றவருடைய மோட்டார் சைக்கிள் ஒன்று யாழ்ப்பாணம் பெருமாள் கோயில் வீதியில் வைத்து அபகரிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணையைச் சேர்ந்த கா. சதானந்தசர்மா என்பவரின் ஹொண்டாமோட்டார் சைக்கிளே திருடப்பட்டது.

பெருமாள் கோயில் வீதியில் சைக்கிளை வைத்து பூட்டியபின்கோயிலுக்குச் சென்று திரும்பி வந்து பார்த்த போது பூட்டி வைக்கப்பட்ட சைக்கிள் காணாமற்போய் இருந்தது தெரிய வந்தது.

இது சம்பந்தமாக யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது, (க-152)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**சிதம்பரநாதர் சின்னாச்சிப்பிள்ளை**

தோற்றம் 13—11—1932
மறைவு 28—09—2000

திதி:- பூர்வபக்க பிரதமை 17 . 10 . 2001

ஆண்டு ஒன்று ஆனதம்மா!
ஆறவில்லை எங்கள் இதயமம்மா!
எங்கண் சென்றாயம்மா?
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்!

பிரிவால் துயருறும்:
-குடும்பத்தினர்.

கரம்பைக்குறிச்சி,
வரணி.

(93442)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கோப்பாய்ப் பிரதேசத்தில் திருட்டுச் சம்பவங்களை ஒழிப்பது மற்றும் கசிப்பு ஒழிப்பு ஆகிய திட்டங்களைச் செயற்படுத்தி நிறைவேற்றிய கோப்பாய் மத்தி கிராம அலுவலர்

**திரு. ஜோசெப் இரட்ணராஜா**

அவர்களையும் அவருக்கு உதவிய ஏனைய கிராம அலுவலர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மேலும், திருடரைப் பிடிப்பதில் ஒத்துழைப்பு நல்கிய அயற்கிராம சனசமூக நிலையமான

செல்வபுரம் உதயசூரியன்
சனசமூக நிலையத்தினர்க்கும்

எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வெள்ளெருவைப்பிள்ளையார்
சனசமூக நிலையம்,
கண்ணகை அம்மன் சனசமூக நிலையம்,
வள்ளியம்மன் சனசமூக நிலையம,
ஸ்ரீகாளி அம்பாள் சனசமூக நிலையம்,
மாரியம்மன் சனசமூக நிலையம்.

கோப்பாய்

(93505)



## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
15
—
02
—
1933



இறப்பு
21
—
09
—
1998

**திருமதி அன்னலிங்கம் நல்லம்மா**

திதி: 17 - 10 - 2001

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய
வைரவப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவால் துயருறும்:
பெறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்:- க. ஜெகதீஸ்வரன்
மானிப்பாய் மேற்கு.
மானிப்பாய்.

(93291)

உதயன்

## கட்டு மீறும் இளைய தலைமுறை

மானிப்பாய்ப் பகுதியில் தனியார் கல்வி நிறுவனத்துக்குச் சென்று விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த பாடசாலை மாணவி ஒருத்தி, பட்டப் பகல்வேளை வீதியில் வைத்துக் கோஷ்டி ஒன்றினால் பலாத்காரமாக ஓட்டோவில் ஏற்றிக் கடத்திச் செல்லப்பட்டுப் பின்னர் பெற்றோரினால் மீட்கப்பட்டிருக்கிறார்.

யாழ்.புறநகர்ப் பகுதியில் தனது தாயாருடன் கோயிலுக்குச்சென்றிருந்த சிறுமி ஒருத்தியை அங்கு வைத்து ஏமாற்றிச் சைக்கிளில் ஏற்றிச்சென்ற இருவர், அச்சிறுமி அணிந்திருந்த தங்க நெக்லஸை அபகரித்து விட்டு அவளை வீதியில் அநாதரவாக விட்டுச்சென்றிருக்கின்றனர்.

இந்த இரு சம்பவங்களிலும் இளைஞர்களே சம்பந்தப்பட்டிருந்தது தெரியவந்திருக்கிறது.

குடாநாட்டில் அண்மைக்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

இவற்றைவிடக் கசிப்பு உற்பத்தி, கோஷ்டி மோதல், வழிப்பறி, திருட்டு, கொள்ளை, புகைப்பிடித்தல், மது, போதைப்பொருள் பாவனை, ஆபாசப்படம் என்று நாளாந்தம் இடம்பெறும் சமூகச் சீரழிவு நடவடிக்கைகள் பலவற்றிலும்கூட எமது நாளைய சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரங்களான இளைய தலைமுறை தீவிரமாகப் பங்காற்றி வருவது பலராலும் - பல சந்தர்ப்பங்களிலும் - வேதனையோடு சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

நாளாந்தம் ஆள்கள் காயமடையும் சம்பவங்களில் வீதி விபத்துக்களைவிட கோஷ்டி மோதல்கள், இருட்டடி, வாள் வெட்டு, மறைந்திருந்து தாக்குவது போன்ற சம்பவங்களே மிக அதிகம் என்பது புள்ளி விவரங்கள்மூலம் கண்டறியப்பட்டிருக்கிறது. இத்தகைய 'வலிந்து தாக்கும்' (Assault) சம்பவங்களினால் காயமடைவோருக்குச் சிகிச்சை அளிப்பதில் யாழ். மருத்துவமனையின் பெரும்பகுதி மருத்துவவளம் வீண் விரயமாகிவருவதை மதகுரு ஒருவர் அண்மையில் வேதனையோடு சுட்டிக் காட்டியிருக்கிறார்.

தனிப்பட்ட தகராறுகள், அயல் வீட்டுச் சண்டைகள், உள்வீட்டுப் பிரச்சினைகள், குழுக்களுக்கு இடையான மோதல் என்று நாளாந்தம் பெரும் எண்ணிக்கையானோர் காயமடைவது சகஜமாகிவிட்டது. இதிலும் அதிகளவில் எமது இளைய தலைமுறையினரே சம்பந்தப்பட்டிருக்கின்றனர்.

போரினால் மிகவும் சீரழிந்து போன குடாநாட்டில் - போர் தீவிரமாக நடைபெற்ற 1995ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியோடு ஒப்பிடுகையில் - சமூகவிரோதச் செயலகள் பெரிய அளவில் தலைவிரித்திருப்பது - இப்போதுதான் என்பது பலரும் சுட்டிக்காட்டுகின்ற விடயம்.

சட்டம், ஒழுங்கு சரிவரப் பேணப்படாத - நிலைநிறுத்தப்படாத - இன்றைய சூழ்நிலையே சமூகச் சீரழிவுச் செயல்கள் தலைவிரிக்கப் பெரிதும் வாய்ப்பாகி இருக்கிறது. தட்டிக்கேட்க யாரும் இல்லை என்ற நிலைமை இளைஞர்கள் தமது சுய கட்டுப்பாட்டை மீறித் தான்தோன்றித்தனமாகச் சீரழிவுச் செயல்களில் இறங்க வாய்ப்பை உருவாக்கியிருக்கிறது.

ஒருபுறம் எமது இளைஞர் சமுதாயம் ஒன்று மண்ணுக்காக - தாய் நாட்டுக்காக - அளவற்ற தியாகங்களைப் புரிந்து கொண்டிருக்க, மறுபக்கம் எமது மற்றொரு தலைமுறை காலங்காலமாகப் பேணப்பட்டுவந்த சமூக விழுமியங்களைத் தூக்கி எறிந்து மிதித்து நடக்க முனைந்து நிற்பது ஆரோக்கியமான எதிர்காலம் பற்றிய நம்பிக்கைகள் மீது பெரிய அடியாக விழுந்திருக்கிறது.

இவ்விடயத்தில் இளைய தலைமுறையை வழிநடத்தவேண்டிய பொறுப்பு தனி ஒருவருக்கோ அன்றி ஒரு குழுவினருக்கோ உரியது அல்ல. மாறாக முழுச் சமூகமுமே இதில் ஆழ்ந்த அக்கறை செலுத்த வேண்டிய அவசியமும் அவசரமும் ஏற்பட்டிருக்கிறது. வீடுமுதல் பாடசாலைவரை - சங்கம் முதல் சமய நிறுவனங்கள்வரை இதுகுறித்த விழிப்புணர்வு தேவை.

பெருகிவரும் சமூகச் சீரழிவுச் செயல்களைத் தடுக்க - அதில் ஈடுபடுவோரைத் திருத்தி வழிநடத்த - இப்போது நாங்கள் தவறுவோமேயானால எமது எதிர்கால சமுதாயம் அதலபாதாளத்தில் வீழ்ந்துவிடப் போவதைத் தவிர்க்க முடியாமற் போய் விடும். இதை நாமும் உணர்ந்து பிறருக்கும் உணர்த்துவோம்.

### மக்களின் பணத்தில் பெறப்பட்ட காணியில்

# அச்சுவேலி ஆஸ்பத்திரிக்கு புதிய கட்டடம் நிர்மாணம்

அச்சுவேலி,ஒக்.17

அச்சுவேலி அரசினர் வைத்திய சாலையில் புதிதாக நிறுவப்படவிருக்கும் மாடிக் கட்டடம், மாவட்ட வைத்தியசாலைத் தரத்திற்கு ஏற்ற விதத்தில் நிறுவப்படவுள்ளது.

புதிய மாடிக் கட்டடத்தை நிறுவுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் பூர்த்தியடைந்திருப்பதால் அரசாங்கக் கட்டடத் திணைக்களம் கட்டட வேலைகளை ஆரம்பிக்க இருப்பதாக வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் சி.விமலேந்திரன் தெரிவித்தார்.

அச்சுவேலி அரசினர் வைத்திய சாலைக்குப் பொதுமக்களின் நன்கொடை மூலம் கொள்வனவு செய்யப்பட்ட நிலத்தில் புதிய கட்டடம் நிறுவப்படவுள்ளது.

அச்சுவேலி அரசினர் வைத்திய சாலை எதிர்காலத்தில் மாவட்ட வைத்தியசாலையாகத் தரமுயரக் கூடிய, நிலைய முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்திருப்பதால புதிய கட்டடம், மாவட்ட வைத்திய சாலைக்கான கட்டட அமைப்புக்கள் கொண்டனவாக நிறுவப்படவுள்ளன.

வைத்தியசாலையின் கட்டட அமைப்பு வேலையை உடனடியாக ஆரம்பிக்குமாறு வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர் விடுத்த கோரிக்கையை அடுத்து வடபிராந்திய பிரதி சுகாதாரப் பணிப்பாளர் அதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார். (க-11)

## ச.ச.நிலையங்களுக்கு நிதி ஒதுக்கீடு

வலி.கிழக்கு,ஒக்.17

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சனசமூகநிலையங்கள் புனரமைப்புக்கென இவ்வாண்டு பன்முக வரவு செலவுத் திட்ட நிதி மூலம் 2 லட்சத்து 15ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (க-180)

## நாட்டு நடப்பு

### நவராத்திரி நாயகியே வாழி!



*வண்ணக் கலைகள் அனைத்தையுமே*
*வனப்புடன் நகையாய்த் தானணிந்து*
*பண் தவழ் இசையைப் பரதத்தை*
*பாங்குடன் நாளும் தான் சுவைத்து*
*பொன்னொளி வீசும் பேரெழிலாள்*
*பொற் 'தமிழ்த்தாமரை' மீதமர்ந்து*
*எண்ணில் அடங்கா எழில் சூழ*
*இயக்கி ஆள்வாள் இவ்வுலகை*
*தேன் எனச் சொட்டும் அருளமுதை*
*தேடிச் சொரிவாள் அன்பர்க்கு*
*நன்மைகள் வழங்கும் நம்தாயை*
*நவராத்திரி நாளில் போற்றிடுவோம்.*

*- விகடகவி.*

### சட்டவிரோதமாகப் படகு மூலம்

# இத்தாலிக்குச் செல்லத் தயாராகவிருந்த 80 தமிழ் இளைஞர் நீர்கொழும்பில் கைது!

கொழும்பு,ஒக்.17

சட்டவிரோதமான முறையில் இத்தாலிக்குச் செல்லவிருந்த 80 தமிழ் இளைஞர்களை கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நீர்கொழும்பு பொலீஸார் கைது செய்துள்ளனர்.

பொலீஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலொன்றின் பேரில் நீர்கொழும்புக்கு அருகில் உள்ள மீன்பிடித்துறைமுகத்துக்குச் சமீபமாக வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை ஏற்றிச்செல்லவிருந்த படகைக் கைப்பற்றிய பொலீஸார் 'சற்றலைற்' கருவிகள், மின் உபகரணங்கள், 300 தண்ணீர்ப்போத்தல்கள் உட்பட பல்வேறு பொருள்களையும் அதில் இருந்து கைப்பற்றியுள்ளனர்.

படகின் உரிமையாளர், அவரது இரண்டு உதவியாளர்கள் ஆகியோரும் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக நீர்கொழும்பு பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி மதுரட்ட தெரிவித்தார். படகு உரிமையாளர், கைது செய்யப்பட்டுள்ள எண்பது சந்தேகநபர்களிடம் இருந்தும் தலா 3 லட்சம் ரூபா வீதம் இரண்டு கோடியே 24 லட்சம் ரூபா பெற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டுள்ள 80 சந்தேகநபர்களும் தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர். (க)

## பச்சிலைப்பள்ளி 'உ' அட்டைக்கு நிவாரணம்

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தைச் சேர்ந்த 'உ' அட்டை வைத்திருப்போரின் இறுதிக்கட்ட நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சியில் தங்கியிருப்போருக்கு நாளை வியாழக்கிழமை, வடமராட்சியில் இயங்கும் பளை பிரதேச செயலகத்திலும், வலிகாமத்தில் தங்கியிருப்போருக்கு வெள்ளிக்கிழமை, யாழ்ப்பாணத்தில் இயங்கும் பளைப் பிரதேச செயலக உபஅலுவலகத்திலும் நிவாரண உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

மேற்குறிப்பிட்ட தினங்களில் சமுகமளித்து நிவாரணப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு பளைப் பிரதேசசெயலர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## வில்லுப்பாட்டு

நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்தப்படும் நவராத்திரி விழாவில் இன்று புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் மாலை 5.30மணி தொடக்கம் 7மணி வரை சோக்கெல்லோ சண்முகம் குழுவினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி இடம்பெறும்.

### சங்கானைப் பணிமனையில்

# கால்நடை போதனாசிரியர் பதவி பல வருடங்களாக நிரப்பப்படவில்லை

சண்டிலிப்பாய்,ஒக்.17

சங்கானை கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையில் கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர்களுக்கான இரண்டு வெற்றிடங்கள் கடந்த பல வருட காலமாக நிரப்பப்படாது இருந்து வருகின்றன.

தற்போது இப்பணிமனையில் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் ஒருவர் மட்டுமே கடமையாற்றி வருகின்றார். மேற்படி இரு வெற்றிடங்களையும் நிரப்பினால் இப்பணிமனையின் சேவைகளை மேலும் விரிவுபடுத்த முடியும் என்று கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

இப்பணிமனை தனியார் வாடகைக் கட்டடத்தில் சண்டிலிப்பாய் டச் வீதியில்" இயங்கி வருகின்றது. இங்கு கோழிகளுக்கு நோய்த்தடுப்பு மருந்து கொடுத்தல், ஆடு, மாடுகளுக்கு சிகிச்சையளித்தல், செயறகைமுறையில் சினைப்படுத்துதல் ஆகிய பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-135)

## உலக உளநல நாள் - ஒக்ரோபர் 10

2001ஆம் ஆண்டின் கருப்பொருள்

*'வேலைப்பளுவும் உளநலனும்'*

ஏதாவது நெருக்கீடுகள் இருந்தால் அவை நீக்கப்படல் வேண்டும்.

# குடாநாட்டில் பட்டதாரிகள் 1,100 பேருக்கு வேலையில்லை

யாழ். மாவட்டத்தில் தற்போது ஆயிரத்து 100 பட்டதாரிகள் வேலையற்றவர்களாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர். வடக்கு - கிழக்கு மாகாணம் முழுவதும் சுமார் 2 ஆயிரத்துக்கும் அதிகமான பட்டதாரிகள் வேலையின்றி இருக்கின்றனர்.

இதேவேளை -

வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி கூட்டுறவு வீதி அபிவிருத்தி அமைச்சில் சுமார் 2 ஆயிரத்து 200 பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் முடங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 9 மாதங்களுக்கு முன்னர் விண்ணப்பங்கள் கோரப்பட்ட சமயம் அனுப்பப்பட்ட விண்ணப்பங்களே இவை எனத் தெரியவருகிறது. எனினும் இவ்வாறு பெறப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் இதுவரை பரிசீலனை செய்யப்படாமல் உள்ளன என்றும் கூறப்படுகின்றது. (ம-185)

## ஐ.தே.கட்சியின் தேசிய மாநாடு

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய மாநாடு எதிர்வரும் 27ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் தொடர்பாக விரிவாக ஆராயப்படவிருப்பதாக ஐதே.கட்சியின் தலைவர் ரணில் தெரிவித்துள்ளார். (க-4)

# வடமராட்சியில் பல இடங்களிலும் விழிப்புக் குழுக்கள் அமைப்பு

வடமராட்சிப் பிரதேசத்தில் அண்மைக் காலமாக இரவு நேரத் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன.

பருத்தித்துறை, புலோலி, தம்பசிட்டி, மந்திகை, துன்னாலை, அல்வாய், நெல்லியடி போன்ற இடங்களில் அதிகரித்துள்ள திருட்டுக்களினால் குடியிருப்பாளர்கள் பெரிதும் அச்சமடைந்துள்ளனர்.

இதன் எதிரொலியாக இரவு நேரத் திருடர்களின் அட்டகாசங்களையும், அடாவடித்தனங்களையும் ஒழிக்கும் வகையில் வடமராட்சிப் பகுதியில் உள்ள பல கிராமங்களிலும் விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

விழிப்புக்குழுக்களில் இளைஞர்கள் முதல் பெரியோர்கள் வரை ஒன்று சேர்ந்து தத்தமது கிராமங்களில் இரவு வேளைகளில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

கிராம மக்கள் விழிப்புக்குழுக்களுக்கு போதிய ஆதரவையும், ஒத்துழைப்பையும் வழங்கி வருகின்றனர். (க-173)

## நாளை

ஐப்பசி 01
வியாழக்கிழமை
திதி : துதியை
முன்னிரவு 10.45 வரை.
நட்ஷத்திரம் : சுவாதி
பிற்பகல் 1.43 வரை.
சுபநேரம் : 7.32 - 9.02
ராகுகாலம் : 1.32 - 3.02
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

இறைவனை அடையவேண்டுமாயின் மனிதன் இறப்பின் வழியைக் கடந்தே ஆகவேண்டும்.


## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



பாழ்வெளியில் தனி வழி போகாதே!
அறியாத வழிகளைத் தவிர்த்துவிடு!
காளைகளும் வண்டியும் நீயும்
கண்ணிவெடிகளில் சிக்கிடுவீர்!

# எட்டுத் திக்கும் எழில்பூத்துக் குலுங்க நவராத்திரி விழா இன்று ஆரம்பம்!

நல்லது இது, தீயது இது என்னும் பாகுபாடு இன்றி எவ்விடத்திலும் செலலும் இயல்புடையது மனம். அதன் வேகத்தை அடக்கி நன்மையாகிய ஒரு நெறியிலே செலுத்துவதற்கு உரிய சாதனமாக அமைவது விரதம். இன்ன நற்செயல்களை செய்வேன், இன்ன தீச்செயல்களைச் செய்யமாட்டேன் என்று உறுதிபூண்டு அவ்வுறுதியிலே மாறாது நிற்பதே விரதமாகும். இந்த உறுதிப்பாட்டில் இடையூறுகள் பல நிகழ்தல் இயற்கையே. ஆனால் அவ் இடையூறுகள் பலவற்றையும் பொறுத்துக்கொண்டு நிலைபிறழாது நின்றே விரதத்தை நிறைவேற்றவேண்டும். துன்பங்கள் பலவற்றையும் பொறுத்துக் கொள்ளுதலும், நல்லன பலவற்றை





மேற்கொண்டு நிற்றலும் ஆகிய இயல்புபற்றி, விரதத்திற்கு நோன்பு என்பதும் பெயராயிற்று.

தாய் அன்புக்கு இணையே கிடையாது; அந்த அன்பு தன் செல்வக் குழந்தைகளின் வாழ்வொன்றையே அடிப்படையாகக் கொண்டது; அதில் தன்னலம் இல்லை; பிற எந்நலமும் அதில் கலத்தல் இல்லை. 'குழந்தைகள்.. குழந்தைகள் என்ற ஒரே நினைவுதான் அதில் இருக்கும். அந்தத் தாயின் வடிவாய், அன்பின் பிளம்பாய், அண்ட சராசரங்களின் அன்னையாய் உள்ள பராசக்தியின் பரங்கருணையும் அப்படியே. அன்னையின் அருளால், அவள் அருள் நிழலில் உலகு நின்று நிலைத்துள்ளது; உலக இயக்கம் ஒழுங்காக நடைபெறுகிறது. பழமைக்குப் பழமையாய் ஆராய்ச் சியுலகின் அப்பாலுக்கப்பாலாய் விளங்குகிறது சக்தி வழிபாடு.

"சக்தியை மறந்தால் வாழ்வில்லை. மூச்சும் பேச்சும் அவளால்; எண்ணமும் எழுத்தும் அவளால்; வாழ்வும் வளமும் அவளால்; சீருஞ் சிறப்பும் அவளால்; ஆக்கமும் ஊக்கமும் அவளால் எல்லாம் அவள தர வந்த ஆக்கம்" என்பர் - ஆன்றோர்.

*ஆத்தாளை எங்கள் அபிராம*
*வல்லியை அண்டமெல்லாம்*
*பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளை*
*புவியடங்கக்*
*காத்தாளை அங்கையில்*
*பாசாங்குசமும் கரும்புவில்லும்*
*சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழு*
*வார்க்கு ஒரு தீங்கில்லையே.*

என்பது அபிராமிப் பட்டரின் அருள்வாக்கு. முப்பெருஞ் சக்தியாக விளங்கும் அப்பெருமாட்டியை அகமுருகி நவராத்திரி தினங்களில் வழிபடுவது அன்புலகின் வழக்கு.

நவராத்திரி, புரட்டாதி மாதத்தில் வளர்பிறைப் பிரதமை முதல் ஒன்பது நாள்கள் சக்தியைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாகும். சக்தியில் வேரூன்றி வளர்வதே சௌந்தாயம். அதாவது பேரழகு சக்தியின் மூல பலத்திலேதான் வளர்கின்றது. மழை வளமாகப் பெய்தபின் நிலமகள் பசுமையுடன் புதுமைகொண்டு விளங்கும் குறிகள் தோன்றுகின்றன. எட்டுத்திக்கும் எழில் பூத்துக் குலுங்குகிறது. இக் காலத்திலேதான் நவராத்திரிவிழா ஆரம்பிக்கின்றது.

நவராத்திரிக்கு முதல்நாள் ஒரு வேளை உணவு உண்டு அடுத்த ஒன்பது நாள்களும் பால், பழம் உண்டு மூன்று வேளைகளிலும் சக்தியைப் பூசித்தல் வேண்டும். 'சக்தியைக் கும்பத்திலோ அல்லது பிம்பத்திலோ மந்திரம் - பாவனை முதலியவற்றால் விதிப்படி ஆவாகனம் செய்து, இவ்விரதத்தை இயன்ற மட்டும் சிரத்தையுடன் மேற்கொள்ளுகிறேன்' என்று சங்கற்பம் செய்து கொண்டு நவராத்திரி பூசையைத் தொடங்கவேண்டும். சக்தியானவள் முதல் மூன்று நாள்களும் ஆற்றலை வழங்கித் தீயசக்திகளை ஒடுக்கி நல்லறம் காக்கும் துர்க்கையாகவும், அடுத்த மூன்று நாள்களும் செல்வத்தை வழங்கும் இலக்குமியாகவும், அடுத்த மூன்று நாள்களும் தன்னை வழிபடும் அன்பர்களுக்குச் சகலகலாவல்லியாக விளங்கும் சரஸ்வதிதேவியாகவும் திகழ்கிறாள். கடைசி மூன்று நாள்களும் சரஸ்வதி தேவியைப் பூசிப்பதால் சரஸ்வதி பூசை என்று வழங்கப்படுகிறது. ஒன்பதாவது நாள் மகாநவமி எனப்படும். இந்த ஒன்பது நாள்களும் விரதம் அநுட்டிக்க இயலாதவர்கள் கடைசி மூன்று நாளகளிலாவது முறையே துர்க்கை, இலக்குமி, சரஸ்வதியாகப பாவித்து ஒவ்வொரு நாள்கள் பூசிக்க வேண்டும். ஒன்பதாவது நாள் எல்லா ஆயுதங்களையும் கொலுவில் வைத்துப் பூசிப்பதால் ஆயுதப்பூசை என்றும வழங்கப்பெறும். சக்தி அண்டங்களையெல்லாம் படைப்பவள் என்பதை உணர்த்தவே பொம்மைகளைக் கொலுவில் வைத்துக் கொண்டாடப் படுகின்றது. பஞ்சபாண்டவர்கள் வனவாசத்திற்குச் செல்லும்போது தமது ஆயுதங்களை ஒரு வன்னிமரத்தின் பொந்தில் வைத்துவிட்டுப் போனதாகவும், பின்னர் திரும்பிவந்த பொழுது அவற்றை அவர்களுள விஜயன் என்னும் அருச்சுனன் பூசித்து எடுத்துக் கொண்டதாகவும் ஆயுதங்களை எடுத்தநாளே நவராத்திரி பத்தாவது நாள் என்று கூறப்படுவதால் அந் நாளை விஜயதசமி என்று கொண்டாடப்படுகிறது.

### விரதபலன்

தினந்தோறும் காலையில் நீராடி நித்திய கடன்களை முடித்துக் கொண்டு சக்தியைப் பூசிப்பதுடன், ஒவ்வொரு நாளிலும் கன்னிப் பெண்களை (2வயது முதல் 10வயதுவரையுள்ள குமாரி, திரிமூர்த்தி, கல்யாணி, உரோகினி, காளிகா, சண்டிகா, சாம்பவி, துர்க்கா, சுபத்திரா) சக்தியின் அம்சமாகப் பாவித்துப் பூசித்து உணவு, உடை அணிகலன்கள் முதலியன கொடுத்து வரவேண்டுமென்று தேவிபாகவதம் முதலிய நூல்கள் கூறுகின்றன. பத்தாவது நாள் விரதத்தைப் பூர்த்திசெய்து உணவு உட்கொள்ள வேண்டும். நவராத்திரி விழாவை ஆண்கள், பெண்கள் இருபாலாரும் மேற்கொள்ளவேண்டும். இம்மையிலே நல்லனவெல்லாம் கைகூடும். மறுமையிலே இந்திராதி போகங்களும் முடிவில் பேரின்பவீடும் கிட்டும். முறையாக இவ்விரதத்தை அனுஷ்டிக்க இயலாதவர்கள் லலிதா சகஸ்ரநாமம், சகல கலாவல்லிமாலை, அபிராமி அந்தாதி முதலியனவற்றைப் பாராயணம் செய்தும் செய்யக்கேட்டும் பயன்பெறலாம்.

இத்தகைய சிறப்புக்கள் பல பெற்ற மேன்மையான இந்த நவராத்திரி விரதத்தை அனுஷ்டித்துச் சக்தியின் அருளால் பதினாறு பேறுகளையும் பெற்றுய்வோமாக. ☆

செய்தி
இராணி வைத்தீஸ்வரக் குருக்கள்,
காரைநகர்.

# எண்ணுக்குள் அடங்காத கீர்த்திபெற்ற வன்னியர் புகழுக்கு வரம்புண்டோ?

**தமிழ்த் தலைவர் அமரர் கு. வன்னியசிங்கத்தின் நினைவு தினம் கடந்த 13 ஆம் திகதி சனிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. அவரை நினைவுகூர்கின்றது இக்கட்டுரை.**

இம் மண்ணகத்தில் ஒவ்வொரு மண்ணையும் நாம் எண்ண முயன்றாலும் உலகில் தோன்றி மறைவோரின் எண்ணிக்கையை நாம் எண்ணிப் பார்ப்பது கடினம். எனினும் உலகில் தோன்றி மறைந்துள்ள சிலரை நாம் மறக்க நினைத்தாலும் மறக்க முடியாது. காரணம் அவர்கள் ஆற்றிய பல்துறைப் பணியின் தாக்கம் எம்வாழ்வோடு ஒட்டிய நிகழ்ச்சியாக அமைகின்றன.

### வரலாற்றில் தனியிடம் பெறும் வன்னியர்

ஈழத் தமிழனத்தின் விடுதலை வரலாற்றில் தனியிடம் பெற்று விளங்குவர் திரு.வன்னியசிங்கம் அவர்கள். அவர் 16.10.1911 வழக்கறிஞர் குமாரசாமிக்கும் செல்லம்மா அம்மையார்க்கும் மகனாகத் தோன்றி 17.09.1959இல் தனது 48ஆவது அகவையில் நாம் கனவிலும் எண்ணிப்பார்க்காத நிலையில் செங்குருதி அமுக்கத்தினாலும், நெஞ்சுவலியினாலும் சடுதியாக எம்மை விட்டுப் பிரிந்தார். அவர் மறைந்து 42 ஆண்டுகள் ஆகியநிலையிலும் அவர் எம்நெஞ்சின் நினைவில் இருந்து அகலமறுக்கிறார்.

அவர் இவ்வுலகில் வாழ்நதது 48 ஆண்டுகளே ஆகும். அவர் தனது 36ஆவது வயதிலே அரசியலுக்கு வந்தவர். 48 வயதுடன் அவர் வாழ்வு முற்றுப்பெறுகின்றது. எனவே அவரது அரசியல் வாழ்வு 12 ஆண்டுகளை உள்ளடக்கியது. அவர் வாழ்வு குறுகியது. அவரின் அரசியற்பணியோ அதைவிடக்குறுகியது. எனினும் அவர் தன்னை முற்றாக அர்ப்பணித்து ஆற்றியபணி 12 ஆண்டுகளை மட்டுமே உள்ளடக்கியபோதும் பல நூற்றாண்டுகள் கழிந்த நிலையிலும் எம் வழித் தோன்றல்கள் அவரை நினைத்தும் பார்க்கின்றளவுக்கு அவர் பணி அகலமானதும் ஆழமானது.

அவர்மீது எமக்கிருந்த எல்லையற்ற பற்றினாலும், பாசத்தினாலும் நமக்குள் நாம் அமைத்து போட்டிவைத்து மறைந்த சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசனும் யானும் இலங்கையிலிருந்து வெளிவரும் 'சுதந்திரன்' இதழிலும் 'வீரகேசரி' இதழிலும் அவரைப்பற்றிப் பல கட்டுரைகள் வரைந்துள்ளோம். தமிழகத்திலும் "ஈழ சுதந்திரனிலும்", "வீரவேங்கையிலும்", "எழுகதிரிலும்", தமிழ்ப்பணி" இதழிலும் வரைந்துள்ள கட்டுரைகள் பலவாகும். எம்மோடு அன்புப்போட்டி நடத்திய உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் "வன்னியர் புகழுக்கு வரம்புண்டோ" என்று வடித்த கவிதை வரலாற்றில் இடம்பெறும் வளமுள்ள கவிதையாகும். எனினும் நாம் படைத்தவை பல சிங்களவெறியாளரின் வெறியாட்டத்தினால் தீக்கிரையாகி சாம்பலாகிவிட்டன. அவை மீட்கப்படின் எம்மைவிட மகிழ்வதற்கு வேறு எவரும் இருக்கமுடியாது.

எனினும் 'தியாக மாமலை' என்ற தலைப்பில் மாவிட்டபுரம் பண்டிதர் கா.சச்சிதானந்தம் வரைந்துள்ள நூலில் வன்னியர் புகழை இவ்விதம் உள்ளந்தொடப்பாடுகிறார்.

அதற்கோர் திறத்துத் திருவுருவம் '*அறத்திற்குருவமில்லையென்பார்; அதற்கோர் திறத்துத் திருவுருவம் தேடில் - மறக்காத புன்னகையும் தண்ணளியும் பூக்குந் தருமச்சேய் வன்னியனார் வண்முகமேயாம்*'

வன்னியரைப்பற்றி திருச்சியானந்தம் அவர்கள் வரைந்துள்ள பாடல் வன்னியரை அப்படியே படம்பிடித்துக்காட்டுகிறது. அறத்தின் வடிவமாக விளங்கிய வன்னியர் பூத்தபுன்னகையை இன்றும் எம்மால் மறக்க முடியாது.

### வன்னியர் பற்றி செல்வா செப்பும் கருத்து

திரு. வன்னியசிங்கத்தைப் பற்றி நாம் எவ்வளவுதான் எழுதினாலும் எமக்கு என்றும் வழிகாட்டியாக விளங்கும் தந்தை செல்வா வன்னியர்பற்றிக் கூறியுள்ள கருத்துக்கள் எம்மைச் சிந்திக்கவைக்கும் ஆழமுள்ள கருத்தாகும்.

இதோ அவர் கூறிய சில:-

ஒரு மனிதனின் வாழ்க்கை எண்ணுக்குள் அடங்கிய சிலஆண்டுகளுகுள் உள்ளடக்கியது. ஆயினும் அவருடைய செய்கையும், கீர்த்தியும் எண்ணுக்குள் அடங்கா காலத்துக்கு நிலைக்கும். திருவாளர் கு.வன்னியசிங்கம் அவர்கள் சீவித்த ஆண்டுகள் 48ஆகும். அவர் இலங்கைவாழ் இனத்துக்குச் செய்ததொண்டு பல நூற்றாண்டுகளாகப் பாராட்டப்படும்.

"தமிழரசுக் கட்சியில் குறிக்கப்பட்ட பல சம்பவங்களில் எதுவும் அவர் இல்லாமல் நடைபெற்றிருக்க மாட்டாது என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

திரு.வன்னியசிங்கம் அவர்கள் நல்ல சிந்தனையாளர். பேச்சாளர். எழுத்தாளர், தமிழரசுக் கட்சிக் கூட்டங்களிலே இறுதி நிகழ்ச்சியாக அமைவது கேள்விகளுக்குப் பதில் கூறும் இத்துறையில் திரு.வன்னியசிங்கம் அவர்கள் கைதேர்ந்தவர் என்பதால் அவரிடமே இப்பணி ஒப்படைக்கப்பட்டிருந்தது. எழுப்பப்படும் கேள்விகள் பல்வேறுபட்டவை. கேள்வியாளரின் நோக்கைப் புரிந்த நிலையில் நையாண்டி வினாவுக்கு நையாண்டி விடையும், பொறுப்புள்ள கேள்விகளுக்குத் தெளிவுபடுத்தும் விடைகளையும் வழங்கி, ஐயம் தெளிவு பெற்ற நிலையில் மக்கள் கூட்டத்தை விட்டுச்செல்ல வழிகண்டவர் நம் வன்னியசிங்கம் அவர்கள்.

ஒருமுறை தந்தை செல்வாவைப் பார்த்து உங்களைப்போல் திரு.வன்னியசிங்கம் அவர்களும் டாக்டர் நாகநாதன் அவர்களும் மாற்றாரின் மனதை மாற்றுகின்ற முறையில் கோபத்துக்கு இடம்கொடாது பதில் சொன்னால் என்ன என்று கேட்டேன். என்னைப் பார்த்து "இருங்கோ" என்று கூறிய தந்தை செல்வா இந்திய விடுதலை வரலாற்றில் காந்தியின் பணியும் தேவைப்பட்டது, நேருவின் பணியும் தேவைப்பட்டது, பட்டேலின் பணியும தேவைப்பட்டது. எல்லோரும் ஒரேமாதிரியாக இருந்து இயக்கம் நடத்தமுடியாது. செல்வநாயகம் செல்வநாயகமாகவும், வன்னியசிங்கம் வன்னியசிங்கமாகவும், நாகநாதன் நாகநாதனாகவும் இருந்து பணியாற்றவேண்டும். ஒவ்வொருவரின் தனித்துவமும் பேணப்படவேண்டும் என்று அவர் கூறியது பொருள் பொதிந்த உண்மை. இந்தநிலையில் மேலும் கேள்வி கேட்காது புன்னகைபூத்த நிலையில் நிறைவு கண்டேன்.

மா.க.ஈழவேந்தன்

ஓர் இனம் எதனையும் இழக்கலாம் மீண்டும் வாழ்வு பெறலாம். ஆனால் தன்தாயகத்தை இழந்து விட்டால் அந்த இனத்துக்கு வாழ்வு இல்லை. இதை உணர்ந்தவர்களுள் திரு.வன்னியசிங்கம் அவர்களும் ஒருவர். எனவேதான் "வாழ்வகத்தைக் காத்து வண்டமிழை வாழ்வித்த வன்னியசிங்கம்" என்று அவரை நாம் வாழ்த்துகின்றோம்.

கப்பலோட்டிய தமிழன் ஒவ்வொரு சிங்கள வெறியாட்டம் இலங்கையின் தென்பகுதியில் நடைபெறுகின்றபோது இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு ஓட்டப்படுகிறான். இப்படி ஓடி ஒதுக்குவதற்கு எங்களுக்குத் தமிழ் மண் இருப்பதால்தான் நாம் இன்னும் உயிரோடிருக்கின்றோம் என்று குறிப்பிட்ட இவர் நாம் ஒதுங்குவதற்கு எமக்கு ஒரு தாயகம் இல்லாவிடின் இந்துமா

(7ஆம் பக்கம் பார்க்க)

# மக்கள் முகம்



மாவிட்டபுரம், தெல்லிப்பழையைச் சேர்ந்த செல்லையா சண்முகநாதன் அகில இலங்கை சமாதான நீதிவானாக கல்கிசை நீதிமன்றத்தில் நீதிவான் கே.எச்.சுமதிபாலா முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.


தெல்லிப்பழை யூனியன்கல்லூரி பழைய மாணவனான இவர் அக்கல்லூரி பழைய மாணவர் சங்க உப - தலைவராகவும், செயலாளராகவும் பல வருடங்கள் பணியாற்றினார்.

கமநல சேவைத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகியவற்றில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக 30 வருடங்கள் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

தற்சமயம் கொழும்பில் வசிக்கும் இவர், இலங்கைக் காப்புறுதிச் சபையின் வெளிக்கள உத்தியோகத்தராகப் பணிபுரிகின்றார்.

லயன்ஸ் கழகம், உலக சைவப் பேரவை ஆகியவற்றில் இணைந்து சமூகப்பணியாற்றி வருகின்றார். (ஐ-3)

★ ★ ★




'கலாபூஷணம்' எஸ்.நடராசா (எஸ்.என்.ஆர்) யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இலங்கையிலும் சென்னையிலும் ஆசிரியர் தராதரப் பத்திரங்களைப் பெற்றுள்ள கொழும்பு பம்பலப்பிட்டி செ... பீற்றேஸ் கல்லூரி, யாழ்.மத்தியகல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி, ஸ்கந்தவரோதயக கல்லூரி, நடேஸ்வராக் கல்லூரி, வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் ஆகியவற்றில் ஆசிரியப் பணிபுரிந்தவர்.

கலை ஆசிரியரான இவர் 'எப்படி வரைவது? ("How to Draw?") என்னும் நூலையும் வெளியிட்டுள்ளார்.(ஐ-100)

★ ★ ★



கோண்டாவில், குமரகோட்டத்தைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சீனியர் வீரவாகு பரமேஸ்வரன் யாழ்மாவட்ட சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மல்லாகம் மாவட்ட நீதிபதி முன்னிலையில் இவர் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

அரசாங்க கணக்குப் பதியுநர் சங்கத்தில் கடந்த முப்பது வருட காலமாகச் சேவையாற்றிவரும் இவர், அச்சங்கத்தின் மாகாணத் தமிழ்த்துறைத் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

மானிப்பாய் சுகாதர சமூக சுற்றாடல் விவகார ஆளுநர் சபை உறுப்பினரான இவர், மானிப்பாய் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொருளாளராகவும், மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தின் உப தலைவராகவும், கட்டுடை குளக்கட்டு ஞானவைரவர் ஆலயம், கோண்டாவில குமரகோட்ட அம்பாள் ஆலயம் ஆகியவற்றின் பரிபாலனசபை உபதலைவராகவும் விளங்குகிறார். மானிப்பாய் மேற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் ஆரம்பகாலத் தலைவராகவும் சேவையாற்றியுள்ளார் (ஐ-90)

★ ★ ★



பண்ணாகம் தெற்கு, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் பரமானந்தம் - திரவியம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம், வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி ஆகிய பாடசாலைகளின் பழைய மாணவரும், காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் மாவட்ட சாரணத் தலைவருமான பரமானந்தம் அஜித்குமார் சாரணர் தலைவர்களுக்கான உயர் பயிற்சியினை சிறப்பாக நிறைவுசெய்து சாரணர் தரு சின்னத்தினைப் (Wood Badge) பெற்றுள்ளார். இவர் மீரிகம லீதசநாயக்க தேசிய பயிற்சி நிலையத்தில் 1998ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதிவரை நடைபெற்ற சாரணத் தலைவர்களுக்குரிய சிங்கள மொழி மூலமான உயர் பயிற்சியில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. இவருக்கான சாரணர் தரு சின்னத்தினை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் 22-09-2001 அன்று நடைபெற்ற காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் 21 ஆவது மாவட்ட சாரணர் பாசறை விழாவில் இரண்டாம் நாள் நிகழ்வில் மாவட்ட சாரணர் ஆணையாளர் ந.சௌந்தரராசன் அணிவித்தார். அஜித்குமாருக்கு 1999ஆம் ஆண்டு சாரணர்களுக்கான ஜனாதிபதி விருது பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

**17-10-2001**

HAPPY BIRTHDAY



எழுதுமட்டுவாளைச் சேர்ந்த

சதீஸ்குமார் - கேதினி தம்பதியினரின்

செல்வப் புதல்வி

## செல்வி விதூர்ஷனா (விதூஷா)

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (17-10-2001) புதன்கிழமை சுன்னாகத்திலுள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அப்பப்பா, அம்மம்மா, அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா (சுவிஸ்), பெரியமாமா, அத்தை (சுவிஸ்), ஆசைமாமா (லண்டன்), சின்னமாமா, உற்றார், உறவினர் அனைவரும் விழுவளைக் கன்னகை அம்மன் துணைகொண்டு பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

நிரந்தர முகவரி:-
எழுதுமட்டுவாழ் தெற்கு,
சிவன் கோயில் றோட்.
தற்காலிக முகவரி:-
சுன்னாகம், கடை வைப்புலம். (93469)

SHATEES COMMUNICATION
CHUNNAKAM.
T.P.No. 070-212924

## கொடிகாமம் A.V.M. போட்டோ புகைப்படக் கலையகத்தினர் வாழ்த்துகின்றனர்



2001 - ஐந்தாந்தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 141 புள்ளிகள் பெற்ற

**செல்வன் A.V.சுபறாஜ்**

அவர்களை

வாழ்த்துவதுடன் கல்வி கற்க உதவிய உடுப்பிட்டி அ.மி. கல்லூரி அதிபர், ஆசிரியர்களுக்கும், வகுப்பாசிரியர் திரு. முரளீதரனுக்கும, ஆ. விமலராஜாவுக்கும், ரியூசன் ஆசிரியர் லீலாம்பிகைக்கும எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சுபறாஜைப் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு வாழ வாழ்த்துபவர்கள்:
அப்பா, அம்மா, அண்ணா, தம்பி, தங்கை, விக்கி மாமா, நிர்மலா அத்தை குடும்பம், அப்பம்மா, கச்சாய் அம்மம்மா, ஹொலண்ட் யோகன் மாமா குடும்பம், ஹொலண்ட் நதி மாமா குடும்பம், ஹொலண்ட் மைனா அன்ரா குடும்பம், சுவிஸ் ஆனந்தன் மாமா குடும்பம் மற்றும் உற்றார், உறவினர்கள்.

நிறஞ்சன் நகையகம், சந்தை வீதி, உடுப்பிட்டி.
(93478)
A.V.M. போட்டோ கலையகம், சந்தை வீதி, உடுப்பிட்டி.

## நீர் இறைக்கும் இயந்திரங்கள் ஏலவிற்பனை

சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க கரவெட்டி, பருத்தித்துறை பிராந்தியங்களின் சங்கங்கள் பயன்படுத்திய "றொபின் 20" நீர் இறைக்கும் இயந்திரங்கள் எட்டு (8) தனித்தனியாக 27.10.2001 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு (புதிய நேரம்) பகிரங்க ஏலவிற்பனையில் பருத்தித்துறை சாரையடியில் உள்ள வடமராட்சி கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் காரியாலயத்தில் நடைபெறும். பார்வையிட விரும்புவோர் 26.10.2001 காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை பார்வையிடலாம். பணம் உடனடியாகச் செலுத்தி நீர் இறைக்கும் இயந்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்,
பருத்தித்துறை பிராந்தியசபை.
(93504)

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

வலி.தெற்கு, வலி. வடக்கு சுகாதாரத் தொண்டர் சங்கம்



மேற்படி வலி.தெற்கு, வலி.வடக்கு பிரிவு சுகாதாரத் தொண்டர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவை ஒதுக்கீடு செய்து மாதம் 1000/= வீதம் மே, ஜூன், ஜூலை மாதங்களுக்குரிய கொடுப்பனவை முதற்கட்டமாகத் தந்துதவியமைக்காக

மாண்புமிகு அமைச்சர்

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும்



யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி. பிரதம அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான

**உயர்திரு. கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**

அவர்களையும்



நல்லூர் பிரதேச சபைத் தலைவரும் யாழ்.மாவட்ட பிரதி அமைப்பாளருமான

**உயர்திரு. க.மணிபல்லவராஜன் (நிஷாந்தன்)** அவர்களையும்



ஈ.பி.டி.பி. அமைப்பாளர்

**உயர்திரு. மரியநாயகம்**

அவர்களையும்



சுன்னாகம் பிரதேச சபைத் தலைவர்

**திரு. கே.கமலசேகரன் (பாபு)**

அவர்களையும்



வலி.வடக்கு அமைப்பாளரும் பிரதேச சபை உறுப்பினருமான

**திரு. தி.சிவகுமார்(வேலு)**

அவர்களையும்



ஈ.பி.டி.பி. காங்கேசன்துறை உதவி அமைப்பாளர்

**திரு. செ. ஜெயராசா(அப்பன்)**

அவர்களையும்

இவர்களுடன் இக்கொடுப்பனவுக்கு ஊக்குவித்த ஈ.பி.டி.பி. அமைப்பாளர்கள் அனைவரையும் நன்றியுடன் பாராட்டி வாழ்த்துவதுடன், யாழ்.மாவட்ட சுகாதாரத் தொண்டர் சங்கத் தலைவர், செயலாளர், உட்பட நிர்வாக சபையினரையும் நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம். (93495)

வலி. தெற்கு. வலி. வடக்கு சுகாதாரத் தொண்டர்கள்.

## சாவகச்சேரி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## கிளைக் குழுக்களைத் தெரிவு செய்தல் - 2001-10-20

மேற்படி சங்கத்தின் துணைவிதி 20-02இன்படி என்னால் ஆக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமைய மேற்படி சங்கத்தின் பின்வரும் கிளைகளின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்காக இச்சங்கத்தின் எல்லாக் கிளைகளினதும் பொதுச்சபைக் கூட்டங்கள் மேற்படி ஒழுங்கு விதிகளின் பந்தி 09 இற்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் கால அட்டவணைப்படி நடைபெறும் என்பதை எல்லா உறுப்பினர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது. ஆகவே தயவுசெய்து கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களுக்கு சமுகமளிக்கத் தகைமை பெற்ற உறுப்பினர்கள் யாவரும் அந்தந்தக் கிளைகளின் கிளைப்பொதுச் சபைக் கூட்டங்களுக்குத் தவறாது சமுகமளித்து கிளைக்குழுக்களைத் தெரிவுசெய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

**கிளைப் பொதுச்சபைக் கூட்டம் ஆரம்பம்: 2001-10-20 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி.**

**கூட்டம் நடைபெறும் இடங்கள் - விவரம் கீழ்வருமாறு:**

| தொ. இல. | கிளை இல. | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் | தவிசாளர் பெயர் | |
|---|---|---|---|---|---|
| 01 | 184 / 184 | நாவற்குழி கொள்வனவு நிலையம் / நாவற்குழி விற்பனை நிலையம் | அச்சுவேலி மத்திய கல்லூரி | திரு. தா. செல்வசோதி | கூ. பரிசோதகா |
| 02 | 185 | தச்சன் தோப்பு | அச்சுவேலி மத்திய கல்லூரி | திரு. ஆர். புவன்ராஜ் | கூ. பரிசோதகர் |
| 03 | 186 | தனங்களப்பு | அச்சுவேலி மத்திய கல்லூரி | திரு. பொ. மோகன் | கூ. பரிசோதகர் |
| 04 | 187 | மறவன்புலோ | அச்சுவேலி மத்திய கல்லூரி | திரு. ஆ. நாகலிங்கம் | கூ. பரிசோதகர் |
| 05 | 188 | கைதடிச் சந்தி | கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம் | திரு. பொ. சிவலிங்கம் | மா. கூ. அ. அலுவலர் |
| 06 | 189 | கைதடி மேற்கு | கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம் | திரு. தா. தவநாதன் | கூ. பரிசோதகர் |
| 07 | 191 | கைதடி நுணாவில் | கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம் | திரு. கி. குமரகுருலிங்கம் | ச. கா. பரிசோதகர் |
| 08 | 190 / 204 | கைதடி வடக்கு / கைதடி மத்தி | கைதடி மத்தி வளர்மதி ச. ச. நிலையம் | திரு. சு. கணேசு | கூ. பரிசோதகா |
| 09 | 192 | மகிழடி (மட்டுவில் தெற்கு) | அச்சுவேலி மத்திய கல்லூரி | திருமத' க. இந்திராணி | மா. கூ. அ. அலுவலர் |
| 10 | 193 | முசுறி (சந்திரபுரம்) | அச்சுவேலி மத்திய கல்லூரி | திரு. எஸ். திருச்செல்வம் | கூ. பரிசோதகர் |
| 11 | 194 | மானாவளை (மட்டுவில் வடக்கு) | அச்சுவேலி மத்திய கல்லூரி | திரு. வை. கைலைநாதன் | கூ. பரிசோதகர் |
| 12 | 195 | ஏற்றம் (நுணாவில் கிழக்கு மேற்கு) | அச்சுவேலி மத்திய கல்லூரி | செல்வி இ. இராசரத்தினம் | மா. கூ. அ. அலுவலர் |
| 13 | 196 / 198 | நாவற் பள்ளம் / பெருங்குளம் (சாவகச்சேரி வடக்கு) | அச்சுவேலி மத்திய கல்லூரி | திருமதி யோ. செல்வரட்ணம் | மா. கூ. அ. அலுவலர் |
| 14 | 197 | சாவகச்சேரி தெற்கு | அச்சுவேலி மத்திய கல்லூரி | திரு. இ. விஜயமோகனராசா | கூ. பரிசோதகர் |
| 15 | 200 | சரசாலை வடக்கு | அச்சுவேலி மத்திய கல்லூரி | திரு. கே. அருந்தவநாதன் | கூ. பரிசோதகர் |
| 16 | 201 | வேம்பிராய்ச் சந்தி | அச்சுவேலி மத்திய கல்லூரி | திரு. பொ. மகேஸ்வரன் | கூ. பரிசோதகர் |
| 17 | 202 | சிக்னல் (மீசாலை வடக்கு) | அச்சுவேலி மத்திய கல்லூரி | திரு. எம். எஸ். சண்முகநாதன் | கூ. பரிசோதகர் |
| 18 | 203 | மீசாலை தெற்கு | அச்சுவேலி மத்திய கல்லூரி | திரு. ஐ. நாகேஸ்வரன் | கூ. பரிசோதகர் |
| 19 | 206 | கச்சாய் வீதி | அச்சுவேலி மத்திய கல்லூரி | திரு. க. சின்னராசா | கூ. பரிசோதகர் |

சு.கணேசமூர்த்தி
கூ.அ.உ. ஆணையாளர் (ப.தெ.), யாழ்ப்பாணம்.

(C/18614)

## கச்சாய் தெற்கு விநாயகர் ஆலயத்தில் மீண்டும் பூஜை

யாழ்ப்பாணம்,ஒக்.17

தென்மராட்சியில் கடந்த காலங்களில் நடந்த அனர்த்தங்களினால் பூசைகள் தடைப்பட்டிருந்த கச்சாய் தெற்கு, அருள்மிகு ஆலடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பூசைகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முதல் பிராயச்சித்தங்களுடன் ஆரம்பிக்கப் படவுள்ளன.

மறுநாள் சனிக்கிழமை சதுர்த்திப் பூசை, உற்சவம் என்பனவும் வழமை போல் நடைபெறும் எனவும் ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (க-ரி)

## புங்கன்குளத்தில் ப.நோ.கூ.சங்க கிளை திறப்பு

அரியாலை,ஒக்.17

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அரியாலை புங்கன்குளம் பகுதியில் உள்ள 17ஆம் இலக்க சங்கக்கிளை கடந்த திங்கட்கிழமை மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

இந்தப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்துள்ளதை அடுத்து மக்களின் வசதி கருதி அதே இடத்தில் இந்தச் சங்கக் கிளை திறந்து வைக்கப்பட்டிருப்பதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (க-17)

## சுகாதார தொண்டருக்கான கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஒக்.17

கடந்த மே, ஜூன், ஜூலை மாதங்களுக்கான கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளாத சுகாதாரத் தொண்டர்கள் அனைவரும் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர், செட்டித்தெருவிலுள்ள உளளூராட்சித் திணைக்களத்திற்கு வந்து தமக்குரிய கொடுப்பனவுகளைப் பெறறுக்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட சுகாதாரத் தொண்டர் சங்கம் அறிவித்துள்ளது. (க-4)

## இளங்கலைஞர் மன்றத்தில் வாணி விழா

அரியாலை,ஒக்.17

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடாத்தும் வாணி விழா நிகழ்வுகள் எதிர்வரும் சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் மன்றத்தின் கலா மண்டபத்தில் மாலை 4 மணிக்கு நடைபெறும்.

முதலாம் நாள் சனிக்கிழமை கோண்டாவில் எம்.பிரேமானந்தன் குழுவினரின் மங்கள இசையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

தொடர்ந்து எஸ்.நித்தியானந்தனின் பாட்டுக்கச்சேரியும், கலாபூஷணம் எஸ்.திலகநாயகம்போலின் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு சங்கீத பூஷணம் திருமதி ஜெ.சுந்தரேஸ்வரியின் நெறியாள்கையில் மன்ற மாணவர்களின் வாத்திய பிருந்தாவும் தொடர்ந்து பஞ்சமூர்த்தி குமரேஸின் பாட்டுக்கச்சேரி, கொக்குவில் கலாபவனம் அளிக்கும் நடன அர்ப்பணம் என்பன இடம்பெறும். (க-17)

## எண்ணுக்குள்....

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமுத்திரம்தான் எம்மை இறுக அணைக்கும் என்று கூறும்போது அவர் கண்கள் கலங்கும். கேட்போரின் கண்களிலும் கண்ணீர் பெருகும். இந்த உண்மையை ஈழத்தமிழ் மக்கள் நன்குணர்ந்துள்ளனர். இன்னும் உணராது எவரும் இருப்பின் அவர்களுக்காக இரங்குவதைவிட நாம் வேறொன்றும் செய்யமுடியாது.

திரு.வன்னியசிங்கம் அவர்கள் மலையகத் தமிழ்மக்களுக்கு வடக்கு - கிழக்கில் உள்ள கல்லூரிகளில் புலமைப் பரிசில் அடிப்படையில் கல்வி பயின்று மேன்மையுற வழி வகுத்தார். சுருங்கக்கூறின் மலையக மக்களுக்கு கல்வியைக் கொடுத்துக் கண்களைத் திறந்தவர் நம் வன்னியசிங்கம். ஏன் ஒருபடி மேலே என்று அறிவு நிலையில் அமைதியின்மையை (Intellectual unrest) உருவாக்கி மலையகத் தமிழ்மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவரும் நம் வன்னியசிங்கம் அவர்களே.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, பூரம் - 2ஆம் பாதம், 1975இல் பிறந்த, (கிரகபாவம் 41/2) செவ்வாய்க்குற்றமற்ற, பிரான்ஸில் வசிக்கும் பெண்ணுக்கு வெளிநாட்டில் மணமகன் தேவை. விளம்பர இல. 1378, மே/பா. உதயன், யாழ்ப்பாணம். (93477)

## SPOKEN ENGLISH

ஆங்கிலத்தில் எழுத, வாசிக்க, இலக்கணம், கதைக்கப்பயில இங்கிலாந்தில் பயிற்சிபெற்ற ஆசிரியர்: நவிகனேஸ்வரன் ஆச்சாரி (வகுப்பில் 10 மாணவர்கள் மட்டும்). இல. 426, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்; நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை. (93450)

## தவறிவிட்டது

பரியோவான் கல்லூரி மாணவனான விநாயகராசா காங்கேயன் என்பவருடைய விசேட அ.அ. பாடசாலை அ.அ. என்பன நவாலிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்படி பாடசாலையில் ஒப்படைத்துதவவும். (93499)

சோமாஸ்கந்தர் விசாலாட்சி என்பவரின் தேசிய சேமிப்பு வங்கி சேமிப்புச் சான்றிதழ், சேமிப்புப் புத்தகம் என்பன பருத்தித்துறைக்கும் ஞானபண்டிதர் கலைமன்றத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சோ.விசாலாட்சி, களைபாவோடை, புலோலி கிழக்கு, பருத்தித்துறை என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (C/18727)

## புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு

பிறிமா, கிறீன்வலி, N.L.D.B. புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் பல அளவுகளில் விற்பனைக்குண்டு. மருந்து வகைகளும் பெற்றுக்கொள்ளலாம். இல.461, நாவலர் வீதி, அத்தியடி; 'கிளின் சொட்' பின்புறம், யாழ். பஸ் நிலையம். (93470)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் (பாதிக்கோழி உட்பட) தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.227, பிறவுண் வீதி, (கலட்டிச் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (93409)

பகிறா இன புறொயிலர் குஞ்சுகள 23-10-2001 வழங்கப்படும். விலை 32/-. முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி.
T.P 3529, 2867 (93510)

## திருத்துதல்

மிருதங்கம், தபேலா, டோல்கி திருத்திடவும், புதியவற்றைப் பெற்றுக்கொள்ளவும். S.இந்திரன், ஸ்ரான்லி வீதி, புகையிரத விடுதி, யாழ்ப்பாணம். (93507)

## விற்பனைக்கு

10 கோஸ்பவர் C.G.என்ஜினும், S.K.V. டைனமோவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ.ரவி, சுதுமலைச் சந்தி, மானிப்பாய். (93474)

## முன்பள்ளி ஆசிரியருக்கு கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஒக்.17

நல்லூர், யாழ்ப்பாணம் பிரதேச செயலகங்களுக்குட்பட்ட அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் ஜூன், ஜூலை மாதத்துக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் நூலக கேட்போர் கூடத்தில் வழங்கப்படும் என நல்லூர் பிரதேசசபைத் தலைவர் க.மணிபல்லவராஜன் அறிவித்துள்ளார். (க)

## ஆங்கில பாட கைநூல்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.17

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஆங்கில பாடத்துக்கான கைநூல்கள் .வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை மேலதிக மாகாண கல்விப் பணிமனையில் ஐந்து கல்வி வலயங்களுக்கு உரிய கைநூல்கள் வழங்கப்படவுள்ளதால் அவற்றை வலய அதிகாரிகள் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-10)

## சுருக்கெழுத்தாளர் நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம்,ஒக்.17

2000ஆம் ஆண்டு நடைபெற்ற சுருக்கெழுத்தாளர் போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆளசேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். வலயக்கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளது. (க-10-ரி)

## பெறுபேறுகள் வெளியாகின

யாழ்ப்பாணம், ஒக்.17

யாழ்.பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் கல்வித் தகைமை முதலாம் வருடப் பெறுபேறுகள் நேற்று வெளியாகின. (க-10)

## 'அருள்சுரபி' வெளியீட்டு விழா

'அருள்சுரபி' ஆன்மீக பத்திரிகை யின் இரண்டாவது இதழ் வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு திருநெல்வேலி தலங்காவற பிள்ளையார் கோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடபிராந்திய இந்துப் பேரவையின் தலைவர் பே.சந்திரசேகரம், ம.சிவயோகசுந்தரம் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக வடபிராந்திய இந்துப் பேரவையின் செயலாளர் ப.சிவலோகநாதன் , ஓய்வுபெற்ற ஆசிரியை செல்வி ச.தங்கப்பொன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (க)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/தேவரையாளி இந்துக்கல்லூரி மாணவி



### செல்வி சுஜாதா கிருஷ்ணானந்தன்

2001 – இந்தாந்தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 126 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு அவரைப் பாராட்டுவதுடன் அவரை வழிநடத்திய அதிபர் மா.குட்டித்தம்பி, ஏனைய ஆசிரியர்கள், விஷேசமாக ஆசிரியை T.சிவாஜினி, கொற்றாவத்தை ஸ்ரடி சேக்கிள கல்வி நிறுவனத்தார் ஆகியோரையும் பாராட்டுகின்றோம்.

ஆனந்தா (F) போட்டோ - *கொற்றாவத்தை*
முகிலன் கொமினிக்கேசன் - *கொற்றாவத்தை*
பிருந்தன் மணப்பந்தல் - *கொற்றாவத்தை*
துவாரகா ரான்ஸ்போட் - *கொற்றாவத்தை*
நியூ டீசன்ஸ் ரெயிலறிங் - *நெல்லியடி*
மாசிலா அச்சகம் - *நெல்லியடி* (93511)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 10 - 08 - 1947



இறப்பு 17 - 09 - 2001

### அமரர் இளையதம்பி இராஜநாயகம்

எளிமை நிறத் தோற்றம்!
எழில் பொங்கி முறுவலிக்கும் இனிய முகம்!
இதமான மொழிபேசி எம்தொண்டில் வழிகாட்டி
எம் தந்தைக்கு ஒப்பானீர்!
ஆபத்தில் உதவுகின்ற அன்பான சோதரன் நீர்!
ஆலய வீதியில் கதையளப்பில் நீர் நண்பர்!
இத்தனையும் எம் மனதில் நிழலாட
எங்குற்றாய் நிம்மதியாய்?


உலவிக்குள விநாயகரை மனமுருகி வேண்டுகின்றோம்!
உமதாத்மா பெறுக சாந்தி!

*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.* (93489)

- அச்சுவேலி உலவிக்குள
சித்தி விநாயகர் ஆலய நண்பர்கள்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 17 - 01 - 1923



ஆண்டவன் அடியில் 02 - 10 - 1997

### அமரர் நமசிவாயம் நடராசா

ஆண்டுகள் நான்கு ஆனாலும் எம் ஆறாத்துயர் நீங்கவில்லை!
நீண்டநாள் சென்றாலும் நம் நினைவு மட்டும் அகலவில்லை!
மாண்டு நீர் மடிந்தீரோ? மண்ணுலகை மறந்தீரோ?
மீண்டும் நீர் வருவீரோ? எம் வேதனையைத் தணிப்பீரோ?
ஆண்டவன் அடி நிழலில் ஆறுதல் நீர் அடைவீரே!
ஆறாமையாலிங்கு அழுது நாம் புலம்புகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*கல்வயல்,*
*சாவகச்சேரி.* (93462) - குடும்பத்தினர்.

---

உ

## சைவ பரிபாலன சபை
## சைவ இளைஞர் நற்பணி மன்றம்
## இலவச பரீட்சை வழிகாட்டல் வகுப்புக்கள்

க.பொ.த. சாதாரண தரம் 2001 மார்கழி மாதம் பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு அனைத்துப் பாடங்களுக்குமான இலவச பரீட்சை வழிகாட்டல் வகுப்புக்களை நடத்த சைவ இளைஞர் நற்பணி மன்றம் தீர்மானித்துள்ளது. இதற்கு பாடசாலை மாணவ, மாணவிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

*இடம்:* **நாவலர் ஆச்சிரமம்**
**கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.**

***விண்ணப்ப முடிவு காலம் :***
இன்று **17-10-2001** தொடக்கம் **18-10-2001** வரை
நேரம் பிற்பகல் 3.00 - 5.00 மணி வரை

*வகுப்புக்கள் ஆரம்பம்:* **20-10-2001**

செயலாளர்,
*சைவ இளைஞர் நற்பணி மன்றம்.*

(C/18726)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அளவையூர் அருட்கவி

### சீ.விநாசித்தம்பிப் புலவர்

அவர்களுக்கு யாழ்.பல்கலைக்கழகம் "**முதுகலைமாணி**"ப் பட்டம் வழங்கிக் கௌரவித்தமையையிட்டு நாம் பெருமகிழ்வு அடைகின்றோம்.

அன்னாரின் பணி மேலும் தொடர எல்லாம் வல்ல ஸ்ரீ நாகவரத நாராயணனைப் பிரார்த்திக்கின்றோம்.

லிங்கன் கிறீம் ஹவுஸ்,
*119,கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (93500)

நா.அப்புலிங்கம்
குடும்பம்

## மரண அறிவித்தல்கள்

### சபாரத்தினம் மகாதேவா

*(இளைப்பாறிய Telecommunication Engineer)*

அரியாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு 5, காசில்லேன், பம்பலப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட சபாரத்தினம் மகாதேவா கடந்த 07.102001 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சம்பந்தர் சபாரத்தினம் - அன்னலட்சுமி தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும், கு.முத்தையா (இளைப்பாறிய பாடசாலை பரிசோதகர்) - நவரத்தினம்மா தம்பதிகளின் மருமகனும், ஞானேஸ்வரியின் (லண்டன்), பாசமிகு கணவரும், ஆனந்த் (லண்டன்), அம்நாத் (லண்டன்), அரவிந்த் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், டாக்டர் ச.அருளம்பலம், காலஞ்சென்ற **P.W.D.** பொறியியலாளர் ச.சுப்பிரமணியம், காலஞ்சென்ற மகேஸ்வரி விஸ்வநாதன் மற்றும் டாக்டர் ச.முத்துக்குமாரசுவாமி, திருமதி டாக்டர் பரமேஸ்வரி ரகுநாதன் (லண்டன்), திருமதி கமலாம்பிகை பாலசுப்பிரமணியம் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற டாக்டர் சிவானந்தம், அருளம்பலம், டாக்டர் மு.குமாரசுவாமி (கனடா) மற்றும் மு.மகாதேவா (பட்டயக்கணக்காளர், கனடா), மு.சிவப்பிரகாசம் (லண்டன்) சரஸ்வதி, கமலாம்பிகை (லண்டன்), காலஞ்சென்ற பகவதி மற்றும் டாக்டர் ரகுநாதன் (லண்டன்), பாலசுப்பிரமணியம் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 12.10.2001 லண்டனுக்கு எடுத்துச் செல்லப்பட்டு 14.10.2001 இல் இறுதிக்கிரியைகள் நடைபெற்றுப் பூதவுடல் எரியூட்டப்பட்டது.

தயவுசெய்து இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
டாக்டர் ச.அருளம்பலம்,
டாக்டர் ச.முத்துக்குமாரசுவாமி.
(சகோதரர்கள்)

*31/3, செட்டித்தெரு,*
*நல்லூர்.* (93498)

### நடராசா சோமசுந்தரம்

*(ஓய்வுபெற்ற அதிபர் )*

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வவுனியா கோயில் குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சோமசுந்தரம் 13.10.2001 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அன்னலட்சுமியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை) கணவரும், கலைச்செல்வி, காண்டீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், குணசிங்கம், ராஜராஜேஸ்வரி, கணேசலிங்கம்(**U.K**), யோகலிங்கம், நடேசலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், திருமதி கனகலட்சுமி கதிர்காமத்தம்பியின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று முன்தினம்(15-10-2001) திங்கட்கிழமை வவுனியாவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.குணசிங்கம்
(சகோதரன்)

*ஆனைக்கோட்டைச் சந்தி,*
*ஆனைக்கோட்டை.* (93501)

### சுப்பையா ஐயக்கோன்

(சாத்திரியார்)

இந்தியாவைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா ஐயக்கோன் 15.10.2001 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கமலாதேவியின் அன்புக் கணவரும், உதயகுமார், கண்ணன், நாகேஸ்வரி, பவானி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2001) புதன்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பா.செல்வராஜா
(மைத்துனர்)

*இல.17, கலைப்புலவர் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (93513)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை

### திருமதி சுபத்திரா கனகசிங்கம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
அலுவலக ஆளணியினர்.**
(93527)



## இதய அஞ்சலி

எமது சபை நிர்வாகக்குழு உறுப்பினர்
**திரு. க. கனகசிங்கம்**
அவர்களின் அன்பு இல்லத் துணைவி

### திருமதி சுபத்திரா கனகசிங்கம்

அவர்களின் மறைவு கேட்டு மிகவும் மனம்வருந்துகின்றோம். அன்னாரின் ஆத்மா எம்பெருமானின் திருவடிநிழலைச்சேர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அவரின் மறைவால் சொல்லொணாத் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

- சைவபரிபாலன சபை.

யாழ்ப்பாணம். (கி/18731)



## கண்ணீர் அஞ்சலி

### திருமதி சுபத்திராதேவி கனகசிங்கம்

எமது நண்பன் திரு. க. கனகசிங்கம்
அவர்களின் அன்பு மனைவியார் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**நண்பர்கள்
வலயக் கல்வி அலுவலகம்
யாழ்ப்பாணம்.** (93541)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பத்மினி சிவகுமார்

வட்டுக்கோட்டை சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மினி 11—10—2001 அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார் சிவகுமாரின் (பிரான்ஸ்) அன்பு மனைவியும், சாயிகீத்தின் (பிரான்ஸ்) அன்புத்தாயாரும், அருளானந்தம் (ரைக்ரர் பெரியதம்பி), காலஞ்சென்ற செல்வரத்தினம் தம்பதிகளின் செல்வப்புதல்வியும், காலஞ்சென்ற குகதாசன், சுவிஸில் வசிக்கும் சிவதாசனின் அன்பு சகோதரியும், செல்லத்துரை, அன்னபாக்கியம் (பிரான்ஸ்) அவர்களின் அருமை மருமகளும், திருமதி ஞானக்குமார் (சவுதி அரேபியா), திருமதி மனோகரன் (சுவிஸ்), திருமதி லக்ஸ்மன் (பிரான்ஸ்), திரு. பாலச்சந்திரன் (ஜேர்மன்), திரு. ரவீந்திரன் (பிரான்ஸ்) அவர்களின் மைத்துனி, மைத்துனர் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18—10—2001) வியாழக்கிழமை பிரான்ஸில் நடைபெறும் என்பதனையும், சங்கரத்தையில் அவரது இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என்பதனையும் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவர்க்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
**ந. சிவராசா**
(சின்னண்ணை- சிறியதந்தை),
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.
(93512)

### தாமோதரம்பிள்ளை ரஞ்சன்

(இளைப்பாறிய இ. போ. ச. சாரதி)

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை ரஞ்சன் 15—10—2001 அன்று திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி தாமோதரம்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்ற திரு. திருமதி சின்னத்துரையின் மருமகனும் நல்லம்மாவின் அன்புக் கணவரும் வசந்தன் (கனடா), கௌரி B. A. (முன்னாள் ஆசிரியை, மீசாலை விக்கினேஸ்வர வித்தியாலயம் தற்சமயம் ஹொலண்ட்), பிரபாகரி (துளசி கனடா), துஷாந்தினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வதனி (கனடா), குகன் (ஹொலண்ட்), ராஜகோபால் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனும் ராகவி (கனடா), வனுஜன், அனுஜன் (கனடா) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15—10—2001 திங்கட்கிழமை பி.ப 4.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**தி. சிவநாதன்** (மருமகன்)

தற்காலிக முகவரி:-
ஸ்ரேசன் றோட்,
சுன்னாகம்.

நிரந்தர முகவரி:-
'துஷாந்தி இல்லம்'
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(93530)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு, ஒக். 17

வலிகாமம் கல்வி வலயத்தில் கோட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மூன்று இடங்களில் இன்று ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன.

ஆட்டங்களின் விவரம் வருமாறு:—

**16 வயதுப்பிரிவு**

★ மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

★ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை எதிர் மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை.

(காலை 8.30 மணிமுதல் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில்

**16 வயதுப் பிரிவு**

★ ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் எதிர் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி

**18 வயதுப் பிரிவு**

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் சுன்னாகம் மயிலணி சைவ மகாஜனவித்தியாலயம்.

★ ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் எதிர் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்.

(பிற்பகல் 2.30மணி முதல் ஸ்கந்தா மைதானத்தில்)

**16 வயதுப் பிரிவு**

★ கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி எதிர் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.

**18 வயதுப் பிரிவு**

★ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி எதிர் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம்.

★ கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி எதிர் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி.

(பிற்பகல் 2.30 மணிமுதல் மானிப்பாய் இந்து மைதானத்தில். (3-86)

★ ★ ★

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் வடமராட்சிப் பாடசாலைகளுக்கு இடையில் 12 வயதுப் பிரிவுக்காக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3.00 மணி — தேவரையாளி இந்து எதிர் ஹாட்லி.

★ மாலை 4.00 மணி — உடுப்பிட்டி அ. மி. க. எதிர் சிவகுரு வித்தி. (இரு ஆட்டங்களும் உடுப்பிட்டி அ. மி. கல்லூரியில் இடம்பெறும்)

★ பிற்பகல் 3.00 மணி — ஹாட்லி எதிர் நெல்லியடி ம.ம.வி.

★ மாலை 4.00 மணி — சிதம்பராக் கல்லூரி எதிர் தேவரையாளி இந்து(இவ்விரு ஆட்டங்களும் றேஞ்சர்ஸ் வி. க. மைதானத்தில் இடம்பெறும்) (ஐ—3)

## நவராத்திரி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 17

அத்தியடி ஸ்ரீசிதம்பர நடராஜ வீரகத்திப்பிள்ளையார் ஆலயத்தின் நவராத்திரிவிழா இன்று மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

மாலை 6 மணிக்கு 'சக்தி வழிபாடு' எனும் பொருள் பற்றி காரை கு. சிவராஜ சர்மா அவர்கள் தெய்வீகப் பேருரை நிகழ்த்தவுள்ளார். (க—10)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக். 17

நவராத்திரி முதல் நாளான இன்று இணுவில் ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் ஆலய கல்யாண மண்டபத்தில் 'அம்பிகையை சரண் புகுந்தால்' எனும் பொருள் பற்றி சைவப் புலவர் க. சத்தியதாசன் சொற்பொழிவாற்றுவார். (க-ரி)


## சாவகச்சேரி
## பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
## பாராட்டி வாழ்த்துகின்றோம்

மீசாலை மேற்கு, மீசாலையில் வசிக்கும்
**திரு. திருமதி செல்வரத்தினம் தம்பதிகளின்**
ஏக புத்திரனும்
எமது சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நெறியாளர் குழு உறுப்பினருமாகிய

### திரு. செ. செந்தூரன்

அவர்கள் கடந்த 06-10-2001 அன்று யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் வெளிவாரி வணிகமாணி (B.Com) பட்டத்தைப் பெற்றமையையிட்டு அவரை உளமாரப் பாராட்டுவதுடன் அவர் மேன்மேலும் பல உயர் பட்டங்களைப் பெற்று சீரும் சிறப்புமாக வாழ்வில் உயர்ந்திட வேண்டுமென மனமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**தலைவர், நெறியாளர்குழு,
பணியாளர்கள்.
சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்.**
(சி/18736)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது மதுவரித் திணைக்கள
உத்தியோகஸ்தர்களின் பிள்ளைகளான

| | |
|---|---|
| செல்வன் ஸ்ரீபவன் ரஜீபவன் | (157 புள்ளிகள்) |
| (வடமராட்சி வலயத்தில் அதிகூடிய புள்ளிபெற்றவர்) | |
| செல்வன் சோதிநாதன் விஷ்ணுசுந்தர் | (142 புள்ளிகள்) |
| செல்வி சிவகடாட்சம் சாயிதா | (129 புள்ளிகள்) |
| செல்வன் சபாரட்ணம் பதுமன் | (118 புள்ளிகள்) |

ஆகியோர் 2001 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்தமையைப் பாராட்டுகின்றோம். இவர்கள் மேன்மேலும் கல்வியில் சிறந்து விளங்கி பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

**பொறுப்பதிகாரியும்
உத்தியோகஸ்தர்களும்
மதுவரித் திணைக்களம்,
வடமராட்சி வலயம்.**
(93540)



## கண்ணீர் அஞ்சலி

திருவாட்டி
### சுபத்திராதேவி கனகசிங்கம்

எமது வித்தியாலய முன்னாள் அதிபரும்
தற்போதைய மேலதிக அதிபருமாகிய
**திரு. க. கனகசிங்கம் அவர்களின்**
துணைவியார் திருவாட்டி சுபத்திராதேவி கனகசிங்கம் அவர்களின் மறைவையிட்டுப் பெருந்துயர் அடைகின்றோம். அன்னாரின் ஆத்மசாந்திக்காய்ப் பிரார்த்திக்கின்றோம்.

**பழைய மாணவர் அவை,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்.**
(93543)



## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய முன்னாள் அதிபரும்
தற்போதைய மேலதிக அதிபருமாகிய
**திரு. க. கனகசிங்கம் அவர்களின்**
துணைவியார்
திருவாட்டி
### சுபத்திராதேவி கனகசிங்கம்

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்,
யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்.**
(93529)



## கண்ணீர்ப் பூக்கள்

எமது சக மாணவி
**குருசாமி சுபாஜினி**
அவர்களின் அன்புத் தந்தையார்

### பொன்னுத்துரை குருசாமி

அவர்கள் 16-10-2001 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமெய்தினார். அன்னாரின் திடீர் மறைவு கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**19ஆம் அணி, யாழ். மருத்துவ பீடம்.**
(93544)

## சர்வதேச லயன்ஸ் கழகங்கள்

**306 B மாவட்டம்**

We Serve

### இலவச லயன்ஸ் கருத்தரங்கு

தலைப்பு:-

1. சலரோகத்தினர் நன்றாக வாழ...
2. சமாதான நீதிவான்கள் நன்றாக சேவை செய்ய...
3. லயன்ஸ் நன்றாக முன்னேற...

இடம்:- பட்டப்படிப்புப் பிரிவு, யாழ்ப்பாணக் கல்லூரி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

காலம்:- 11.11.2001 ஞாயிறு காலை 8.30 மணி

ஆர்வலர்கள் பதியும் இடம்:
லயன்ஸ் Dr.S.S. அருளானந்தம்,
யாழ். மெடிக்கல் சென்ரர்,
வேம்படி பாடசாலைமுன்,
166, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

*சலரோகத்தினரும் அவர்களைப் பராமரிப்பவர்களும். Lions. J.P கள் பயன்பெற வேண்டிநிற்கும்.*

**சாவகச்சேரி நியூ இந்திரன் ஜுவல்லர்ஸ்,**
**213A, கஸ்தூரியார் வீதி, (ராஜா சினிமா அருகில்)**
யாழ்ப்பாணம்.

(93524)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

அதிபர் தரம் IIஇல் இருந்து மீசாலை வீரசிங்கம் ம.வி.இல் பல ஆண்டுகள் சேவையாற்றி தற்போது அதிபர் தரம் I இற்குப் பதவியுயர்வு பெற்று யா/அல்லாரை அ.த.க. பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றும்

**திருமதி சிவக்கொழுந்து ஜெயக்குமார்**
**(B.A. Dip. in Edu. S.L.P.S. I)**

*அவர்களை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

ஆசிரியர் கழகம்,
யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.

(93509)

## உள்ளுவோம் உயர்த்துவோம்



**உயர்திரு. குமாரசுவாமி சிவானந்தம்**

(B.A. Dip in Edu., S.L.P.S.I)

பற்பல நலவும் பாங்குற சேவையும்
நற்குணம் பல மிளிர்திறவும்
சற்குருவாய், சிவானந்தமாய் என்றும் விளங்க
சிற்சில நாளினில் அதிபர் தரம் ஒன்றினை அடைந்தானை
எமது பாடசாலை எழுபத்தைந்து ஆண்டினைப்
பூர்த்தியடைகின்ற இவ்வேளை பற்பல காலமும்
பல்வளமும் சேர பொற்பதம் வேண்டுவோம்
வேம்படி விநாயகனை!

ஆசிரியர்கழகம,
*யா/மீசாலை வீரசிங்கம்.ம.வி*

(93508)

## ஆசிரிய இடமாற்ற விண்ணப்பங்கள் பரிசீலனை

வலிகாமம் தெற்கு,ஒக்.17

வலிகாமம் கல்வி வலயத்தில் இருந்து 2002ஆம் ஆண்டுக்கு இடமாற்றம்கோரி விண்ணப்பித்திருந்த ஆசிரியர்களுடைய விண்ணப்பங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டு அது சம்பந்தமாக எடுக்கப்பட்ட முடிவுகள், சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு வலயக்கல்வி அலுவலகத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மாகாணங்களிடையே - வடக்குக கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே - வலயங்களுக்கிடையே - இடமாற்றம் கோரி விண்ணப்பித்த ஐம்பதுக்கு மேற்பட்டவர்களின் விண்ணப்பங்கள் உரிய முறைப்படி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இடமாற்றசபை கூட்டத்தில் இடமாற்றங்கள் பரிசீலிக்கப்பட்டன.

தற்போதைய பாடசாலைகளில் சம்பந்தப்பட்ட ஆசிரியரின் சேவை மூப்பு மற்றும் கணவன் - மனைவி ஆகியோர் ஒரே இடத்தில் கடமையாற்றக்கூடியதான விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

கல்விப்பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற இந்த இடமாற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்), நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் ஆசிரிய தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் உரிய விண்ணப்பதாரிகளுக்கு தபாலில் அனுப்பிவைக்கப்பட்டன. (க-152)

## செயலமர்வு

தென்மராட்சி,ஒக்.17

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 7, 8 ஆகிய வகுப்புகளில் சுகாதாரம், உடற்கல்வி ஆகிய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலச் செயலமர்வு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (க-117)

## பரிசளிப்பு விழா

வலிகாமம் தெற்கு,ஒக்.17

உடுவில் அமெரிக்கமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா, பாடசாலை அதிபர் சி.லோகேஸ்வரன் தலைமையில் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

விழாவில் வைத்திய கலாநிதி எம்.மகேசன் பிரதம விருந்தினராகவும், சா.தங்கரட்ணம் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். இளைப்பாறிய பிரதம மருந்தாளர் திருமதி நாகேஸ்வரி மகேசன் பரிசில்களை வழங்குவார். (ம-152)

## வாழ்த்தி மகிழ்கின்றோம்

**பேராசிரியர் கந்தையா குணரத்தினம்**

கடந்த 06-10-2001 சனிக்கிழமை நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின்போது யாழ். பல்கலைக்கழகம் பேராசிரியர் கந்தையா குணரத்தினம் அவர்களுக்கு 'பேராசான் கௌரவ கலாநிதி' எனும் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது. அவர் மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து உயர் கல்வி மாணவருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் சிறந்த சேவையாற்ற வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

*பல்லாண்டு பல்லாண்டு வாழியவே!*

**ச.சிறீஸ்கந்தராசாக் குருக்கள்**
*(கோண்டாவில் மேற்கு மகா கணபதிப்பிள்ளையார் கோயில் பிரதம குரு;*
*கோண்டாவில் மேற்கு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் கோயில் பிரதம குரு;*
*தாவடி முனீஸ்வரர் ஆலயப் பிரதம குரு),*

**திரு. இ.மகேந்திரன்**
(மகேந்திரன் களஞ்சியம், கோண்டாவில் மேற்கு)

(93526)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 - 08 - 1948 | 17 - 09 - 2001 |



அமரர்

### இளையதம்பி இராசநாயகம்

*சிறகிழந்த பறவைகளாய்*
*திசைமாறித் தவிக்கின்றோம்*
*உறவிழந்து உணர்விழந்து*
*ஊமைகளாய் அழுகின்றோம்*
*பிறவியிலே இனியொருகால்*
*பிறப்போமா அப்பா நாம்*
*அறிவிழந்து துடிக்கின்றோம்*
*ஆயிரம் இருந் தென்ன பயன்?*

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (17-10-2001) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*தச்சன் தோட்டம்,*
*அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி*

- மனைவி, பிள்ளைகள்.

(93520)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



THE DRAGON MARTIAL ARTS AFFILIATED TO SRI LANKA SHOTOKAN KARATE - TO NORTHERN PROVINCE ORGANISED BY

**Mr.P.RAJAN (BLACK BELT 4TH DAN)**

அவர்களால் 2ஆவது கறுப்புப்பட்டி பெற்றமைக்காக
K.ஜேவேந்திரன் (kayts), N.காமுகிலன்,P.ராஜன் (மாஸ்ரர்), S.லோகேஸ்வரன், R.ராஜ்குமார் ஆகியோரை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**கராத்தே மாணவர்கள், யாழ்ப்பாணம்.**

(93521)

## யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம்
## நீதிமன்ற சான்றுப் பொருள்கள்
## ஏலவிற்பனை

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும், இதுவரை உரிமை கோரப்படாததுமான பொருள்கள் (துவிச்சக்கர வண்டிகள், பழைய அலுமினியப் பாத்திரங்கள், வெற்றுச் சாராயப் போத்தல்கள் முதலியன) 03-11-2001ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.10.00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

02. விற்பனை செய்யப்படவுள்ள பொருள்களில் யாராவது உரிமை கோருவதாக இருந்தால் தங்கள் கோரிக்கைகளை குறித்த ஏலவிற்பனைத் திகதிக்கு முன்னதாக அறியத்தருதல் வேண்டும்.

03. பொதுமக்கள் நீதிமன்றப் பதிவாளரின் அனுமதியைப் பெற்று, விற்பனை செய்யப்படவுள்ள பொருள்களை ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலம் முன்னராகப் பார்வையிடலாம்.

04. ஏதாவது பொருள்கள் நீதிமன்றத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையை விடக் குறைவாகக் கேட்கப்படுமாயின் அதனை விற்பனை செய்யாது விடுவதற்கு நீதிமன்றத்திற்கு உரிமை உண்டு.

05. கொள்வனவு செய்யப்படும் பொருள்கள் உடனடியாக நீதிமன்ற வளவிலிருந்து அப்புறப்படுத்தப்படுதல் வேண்டும். அத்துடன் சகல கொடுப்பனவுகளும் காசாகவே செய்யப்படல் வேண்டும் என்பதுடன் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

*க.மீரா,*
*பதிவாளர்,*
*நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம்.*

*நீதிவான்,*
*நீதிவான் நீதிமன்றம்,*
*யாழ்ப்பாணம்.*

*2001 ஒக்ரோபர் மாதம் 16ஆம் திகதி*
*நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம்.*

(93523)

# விடுதலைப் புலிகளின் கடல், வான் அணிகளை நிறுவுவதில் பெரும் பங்கு வகித்தவர் சங்கர்

**கடந்த மாதம் 26ஆம் திகதி கிளைமோர் தாக்குதலுக்குப் பலியான விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான சங்கர் விடுதலைப் புலிகளின் இயக்கத்தின் வளர்ச்சியில் எத்தகைய பங்கினை ஆற்றினார் என்பதை இக்கட்டுரை விவரிக்கிறது. எம்.எஸ்.எம். அயுப் என்பவரால் எழுதப்பட்டு 07.10.2001 'லக்பிம' சிங்கள வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

கடந்த செப்ரெம்பர் மாதம் 26ஆம திகதி விடுதலைப் புலிகள் இராணுவத்திற்கு எதிராகப் பாரிய தாக்குதலை மேற்கொள்வார்கள் எனப் படையினரும், கள நிலைமைகள் பற்றி அறிந்தவர்களும் எதிர்பார்த்தனர். செப்ரெம்பர் 26ஆம் திகதி யாழ்ப்பாணத்தை மீண்டும் கைப்பற்றுவதற்காக விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதலை மேற்கொள்ளக் கூடும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

நவம்பர் 26ஆம் திகதி வடக்கையும் தெற்கையும் சேர்ந்த மிக முக்கியமான இருவரின் பிறந்த நாளாகும். அதாவது முன்னாள் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலியும் விடுதலைப் புலிகளின் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் பிறந்தது இந்த நாளிலேயே ஆகும்.

அவ்வாறே செப்ரெம்பர் 26ஆம் திகதி வடக்கையும் தெற்கையும்



வன்னிக்காட்டில் புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் மூத்த பிரமுகர்களுடன் சங்கர்.

சேர்ந்த முக்கியமான இருவரின் மரணமடைந்த தினமாகும். முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்காவும் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் இராசையா பார்த்தீபனும் (திலீபன்) இந்த நாளிலேயே அரசியல் காரணங்களுக்காக மரணமானார்கள்.

திலீபன் மரணமான நாள் விடுதலைப் புலிகளுக்கு மிக முக்கியமான நாள் ஆகையால், அன்றைய தினத்தில் விடுதலைப் புலிகள் திலீபனை நினைவு கூரும் விதத்தில் பாரிய தாக்குதலை மேற்கொள்வர் எனப் பரவலாக எதிர்பார்க்கப்பட்டது.

இருப்பினும் அவ்வாறான தாக்குதல்கள் எவையும் இடம்பெறவில்லை. பதிலாக விடுதலைப் புலிகளால் சொல்லிமாளமுடியாத ஒரு பேரிழப்பு செப்ரெம்பர் 26ஆம் திகதி இடம்பெற்றது. அந்த அமைப்பின் 'மூளை' எனக் கருதப்பட்டவர், எவராலோ கொல்லப்பட்டுள்ளார்.

வைத்திலிங்கம் சொர்ணலிங்கம் அல்லது சங்கர் என அழைக்கப்பட்ட அந்த மூளைசாலி, மரத்தில பொருத்தப்பட்டிருந்த கிளைமோர் கண்ணிவெடிக்கு இரையானார். இந்தச் சம்பவம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னியில் ஒட்டிசுட்டானுக்கும் புதுக்குடியிருப்புக்குமிடையே இடம்பெற்றது.

தற்போது 30, 40ஆயிரம் படையினரை யாழ்.குடாநாட்டில் ஏதோ ஒரு விதத்தில் அச்சநிலையில் வைத்திருக்கும் ஆற்றல் விடுதலைப் புலிகளிடம் உள்ளது. இந்தப் படையினருக்கான உணவு மற்றும் ஆயுத விநியோகம் கடல் மற்றும் வான் வழியாகவே - ஆபத்துக்கள் நிறைந்த சூழ்நிலையிலேயே - நடைபெற்றுவருகின்றன.

விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் பிரிவு மற்றும் வான் பிரிவு ஆகியனவற்றினாலேயே படையினருக்கான விநியோகம் ஆபத்து நிறைந்ததாக அமைந்துள்ளது. கடற்புலிகள் மற்றும் வான் பிரிவுகளுக்கான தொழில்நுட்பத் தேவைகளைக் கவனித்து வந்தவர் சங்கரே ஆவார். இக்காரணத்தாலேயே சங்கர் விடுதலைப் புலிகளின் மூளை எனக்கருதப்பட்டார்.

தமிழ்ப் பிரிவினைவாத ஆயுதப் போராட்ட வரலாற்றில் முதன் முதலாக நிறுவப்பட்ட அமைப்பு விடுதலைப் புலிகள் அமைப்பு அல்ல; முதலில் அமைக்கப்பட்ட அமைப்பு புதிய தமிழ் புலிகள் (TAMIL NEW TIGERS) அமைப்பாகும். அந்த அமைப்பில் உறுப்பினராக இருந்து இன்றுவரை செயற்பட்டுக்கொண்டிருப்பவர் விடுதலைப் புலிகளின் தலைவர் வேபிரபாகரன் மட்டுமே. 'புதிய தமிழ் புலிகள்' அமைப்பு செயற்பட்ட காலத்தில் இருந்தே சங்கர் பிரபாகரனுக்கு ஒத்துழைப்பு வழங்கிவந்தார்.

சங்கர் வவுனியாவில் மூன்றுமுறிப்பு என்ற இடத்தில் அமைந்துள்ள தனது தோட்ட நிலத்தை அந்த அமைப்பின் பயிற்சி நடவடிக்கைகளுக்காகவும் பாதுகாப்பிடமாகவும் வழங்கியிருந்தார். அது ஆரம்ப காலம். எனவே அன்றில் இருந்து சங்கர் பிரபாகரனின் மிக நம்பிக்கைக்குரியவராக விளங்கினார்.

சங்கர் வல்வெட்டி என்ற கிராமத்தைச் சேர்ந்தவர். பிரபாகரனின் சொந்த ஊர் வல்வெட்டித்துறையாகும். சங்கரின் தாயார் மனோன்மணி, பிரபாகரனின் ஊரான வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர். இதன்மூலம் சங்கரும் பிரபாகரனும் உறவினர்கள் ஆயினர்.

ஆரம்பகாலத்தில் தமிழ் ஆயுதக் குழுவினர் பிரபாகரனை 'தம்பி' என்ற செல்லப்பெயரால் அழைப்பர். இன்று அவர் தலைவர். இன்றும் அவரைத் தம்பி என அழைக்கும் ஒரு சிலரில் சங்கரும் ஒருவர்.

இவை அனைத்தையும் கவனத்திற் கொள்ளும்போது புதுக்குடியிருப்பு கிளைமோர் குண்டுவெடிப்பில் இழக்கப்பட்டது சங்கரின் உயிர் மாத்திரமன்றி பிரபாகரனது வலதுகையுமாகும். இருப்பினும் சங்கரின் மரணம் தொடர்பாக பெரிய எடுப்பில் பிரசாரங்களை மேற்கொண்டு தமது தரப்பினருக்கு மனோவலிமையை அதிகரிக்கச் செய்யவும், அதேநேரம் எதிரிகளின் மனத்திடத்தை சிதைவுறச் செய்யவும் அரசு நடவடிக்கைகள் எவற்றையும் மேற்கொள்ளவில்லை. இதற்கு வேறு காரணங்கள் இருக்கவும் கூடும்.

தியாகி திலீபனின் நினைவுத்தினத்தன்றே சங்கரின் மரணம் இடம்பெற்றுள்ளது. வழமையாக கூடபகுதியில் திலீபனின் நினைவு தினம் உணர்ச்சி பூர்வமாக நினைவு கூரப்படும். அவ்வாறான ஒரு நாளில் மிக மூத்தவரும் மூளைசாலியுமான சங்கரைப் படுகொலை செய்த சம்பவமானது விடுதலைப் புலிகளுக்குக் கடுஞ்சினத்தை ஏற்படுத்தியிருக்கும். அவர்கள் இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கை இதைப் பிரதிபலித்தது.

### விமானமோட்டும் பயிற்சி

1980ஆம் ஆண்டு சங்கர் வெளிநாடு சென்றார். சிறிது காலம் கப்பல் ஒன்றில் பணியாற்றினார். பின்னர் ஐரோப்பிய நாடுகளில் சிறிதுகாலம் பணியாற்றிவிட்டு இறுதியாகக் கனடா சென்றார். அவர் கனடாவில் தங்கியிருந்தபோது விடுதலைப் புலிகளுக்காக நிதி சேகரித்தார். கனடாவில் மொன்றியல் நகரில் விமானப் பொறியியலாளராகவும் கப்பல் பொறியியலாளராகவும் பயிற்சிபெற சங்கருக்கு வாய்ப்புக் கிடைத்தது. விமானங்களை ஓட்டுவதற்கான அனுமதிப் பத்திரமும் சங்கரிடம் உள்ளது எனக் கூறப்பட்டது. வானொலித் தொடர்பு சம்பந்தப்பட்ட தொழில்நுட்பங்கள் அனைத்தும் சங்கருக்கு அத்துப்படி.

1983 இனக்கலவரத்தை அடுத்து சங்கர் நாடு திரும்பினார். அன்றிலிருந்து இறுதிவரை சங்கர் சிறிலங்கா இராணுவத்தை வடக்கு - கிழக்கிலிருந்து விரட்டியடித்து தனித் தமிழ் நாடு ஒன்றை உருவாக்கும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

விடுதலைப் புலிகள் அமைப்பில் இரண்டாவது இடத்தை வகித்த மகேந

> **"...நீங்கள் தமிழீழத்தின் ஆத்மாவை அழைத்துச் செல்கிறீர்கள். அவருக்கு ஏதாவது நடக்குமாயின் இங்கு எதுவுமே மிச்சமிராது என்பதை நினைவில் வைத்திருங்கள்.."**
>
> \- 1987இல் இந்திய அதிகாரியிடம் சங்கர்.

திரராஜா எனப்படும் மாத்தையாவுடன் இணைந்து சங்கர் விசேட ஆயுதப் பயிற்சிகளைப் பெற்றார். விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த இளைய உறுப்பினர்கள் கட்டாயமாகப் போர்க்கள அனுபவங்களைப் பெற்றிருக்க வேண்டும் என்பதால் சங்கர் வன்னியில் மாத்தையாவுடனும், எண்பதுகளில் பிரபலமாக விளங்கிய புலேந்திரனுடன் திருகோணமலையிலும் அந்த அனுபவங்களைப் பெற்றுக் கொண்டார்.

1990இல் லெப்டினன்ட் ஜெனரல் (அப்போது பிரிகேடியர்) டென்சில் கொப்பேகடுவ தலைமையில் 'வலம்புரி' என்ற இராணுவ நடவடிக்கையின் போது இராணுவம் 'பாக்கு நீரிணை' மற்றும் அதனையண்டிய தீவுகள் ஆகியனவற்றின் கட்டுப்பாட்டை புலிகளிடமிருந்து கைப்பற்றியது. அதன் பின் தாங்களும் கடற்படைப் பிரிவு ஒன்றை உருவாக்கித் தீவகத்தின் கட்டுப்பாட்டை மீளவும் பெறுவோம் என விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினரான யோகரத்தினம் யோகி கூறியிருந்தார். யோகியின் இந்தச் சவாலுக்கு ஏற்ற விதத்தில் பிரபாகரன அப்போது நடவடிக்கைகளை மேற்கொண்டார். எனவே இதற்கென சங்கரைப் பயன்படுத்தினார். சங்கர் சிங்கப்பூரில் இருந்து உபகரணங்களையும் கடற்கலங்களையும் கொண்டு வந்து கடற்புலிகள் பிரிவிற்கு அத்திவாரமிட்டார்.

எண்பதுகளில் விடுதலைப் புலிகள் தங்களது முதலாவது 'றோலர்' படகைக் கொள்முதல் செய்தனர். 'கடல்புறா' எனப் பெயரிடப்பட்ட அந்த றோலர் சங்கரின் முயற்சியினால் றேடார் மற்றும் சுடுகலன்கள் பொருத்தப்பட்டு நவீனமயமாக்கப்பட்டது. 1987இல் கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தமானது மூன்று மாதங்களுக்குள் வெற்றுக் கடதாசியானதைத் தொடர்ந்து 'கடல்புறா' றோலரில் சென்ற புலிகள் கைது செய்யப்பட்ட காரணத்தால் மீண்டும் சண்டை வெடித்தது.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட சில நாள்களின் பின்னர் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த உயர்மட்ட உறுப்பினர்கள் 17பேர் இந்தக் 'கடற்புறா' றோலரில் ஆயுதங்களுடன் சென்றுகொண்டிருந்தபோது சிறிலங்கா கடற்படையை எதிர்கொள்ள நேரிட்டது. அந்தப் 17 பேரும் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 12 பேர் பின்னர் 'சயனட்' உட்கொண்டு மரணமானார்கள். இதைத் தொடர்ந்து யுத்தம் மீண்டும் வெடித்தது.

கடற்புலிகள் அமைப்பைத் திட்டமிட்டு உருவாக்கியவரும் அதன் முதல கட்டளை அதிகாரியும் சங்கரே ஆவார். சாலை, நாச்சிக்குடா, சுண்டிக்குளம் ஆகிய இடங்களில் கடற்புலிகளின் இறங்குதுறைகளும் முகாம்களும் சங்கரின் திட்டத்தின்படியே உருவாக்கப்பட்டன.

சங்கர் நீரில் மூழ்கும் உடைகள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்ததுடன் வெளிநாட்டுக் கூலிப் படையினரை அமர்த்தி பயிற்சிகளை அளித்து நீரடித் தாக்குதல் குழுவை உருவாக்கினார். அந்த அணியின் பெயர் சுலோஜன் அணி ஆகும்.

இலங்கை - இந்திய சமாதான ஒப்பந்தம் முறிவடைந்த சந்தர்ப்பத்தில் அதாவது மீண்டும் யுத்தம் மூளக காரணமாக அமைந்த சம்பவத்துடன் கடல்புறா றோலருக்குத் தொடர்பு இருந்தது போலவே 1995 ஏப்ரல் 19ஆம் திகதி பொ.ஐ.முன்னணிக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம்பெற்ற யுத்தநிறுத்தம் முடிவடைந்தபோது திருகோணமலைத் துறைமுகத்திற்குள் தரித்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கடற்படைக்குச் சொந்தமான 'சூரயா' மற்றும் 'ரணசுறு' கப்பல்கள் மீதான தாக்குதலை சங்கரின் 'சுலோஜன்' அணியினரே மேற்கொண்டனர்.

இந்த நீரடித் தாக்குதல் அணிக்கு பயிற்சியளிப்பதில் பங்குகொண்ட கங்கைஅமரன் சில வாரங்களுக்கு முன்னர் சங்கரைப் போலவே குண்டு வெடிப்பில் பலியானார்.

### வான்புலிகள் அமைப்பு

வான்புலிகள் அணியை உருவாக்குவது சங்கரின் அடுத்த இலக்காக இருந்தது. முதலில் விமானப் படைக்குச் சொந்தமான வான்கலன்கள் மீது தரையில் இருந்து தாக்குதல்களை மேற்கொள்வதற்கான பயிற்சிகளை சங்கர் வழங்கினார். இந்தத் தாக்குதல்களுக்கு முதலில் 50 கலிபர் துப்பாக்கிகளை சங்கர் பயன்படுத்தினார். ஆனால் பின்னர் ஏவுகணைகளைக் கொள்வனவு செய்தார். சங்கரின் வான் தாக்குதல் பிரிவின் ஆற்றலைச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்த வுடனேயே காணக்கூடியதாகவிருந்தது. 1995 ஏப்ரலில் மீண்டும் யுத்தம் ஆரம்பித்த 10 நாள்களுக்குள் அதாவது 28 மற்றும் 29ஆம் திகதிகளில் விடுதலைப் புலிகள் 'அவ்ரோ' ரக விமானங்கள் இரண்டைச் சுட்டுவீழ்த்தி அவற்றில் பயணம் செய்த 89 படையினரையும் 3 பத்திரிகையாளர்களையும் கொன்றனர். இது சிறீலங்கா விமானப் படையினருக்கு எதிராக விடுதலைப் புலிகள் முதன் முதலாக ஏவுகணைகளைப் பயன்படுத்திய சம்பவமாகும். இந்தச் சம்பவத்தின் பின்னர் விமானப்படைக்குச் சொந்தமான வான்கலன்கள் மீது விடுதலைப் புலிகள் இடைக்கிடையே தாக்குதல்களை மேற்கொண்டு வந்தனர். இதன் காரணமாக சிறீலங்கா விமானப் படை மிகக் குறுகிய காலத்துக்குள் தனது 25 வான்கலங்களை இழந்துள்ளது.

**தமிழில் : கஜனி**

விமானங்களின் தேவை விடுதலைப் புலிகளுக்கு ஆரம்ப நாள்களிலேயே இருந்துவந்தது. விடுதலைப் புலிகள் முதலில் வான்கலங்களைத் தாங்களே நிர்மாணிப்பதற்கு முயற்சித்தனர். ஒரு காலத்தில் புலிகளின் யாழ்.தளபதியாக விளங்கிய சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு) 1987இல் புங்குடுதீவில் 'ஹொண்டா-200' ரக மோட்டார் சைக்கிளின் இயந்திரத்தைப் பயன்படுத்தி சிறிய ரக விமானம் ஒன்றை அமைத்தார். அந்த விமானம் துள்ளித்துள்ளி நிலதத்தில் ஓடியதே தவிர மேலெழவில்லை. அத்துடன் வான்கலன்களை உருவாக்கும் முயற்சிகள் கைவிடப்பட்டன.

இந்திய இராணுவம் விடுதலைப் புலிகள் உட்பட சிறீலங்காவைச் சேர்ந்த 6 ஆயுதக் குழுக்களுக்கு உத்தரப் பிரதேசத்தில் ஆயுதப் பயிற்சிகளை வழங்கியது. அந்தப் பயிற்சிகளின் போது ஏவுகணைகளின் பாவனை மற்றும் வான்கலன்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் தொடர்பாக கற்றுக்கொள்ள புலிகளுக்கு வாய்ப்புக் கிடைத்தது.

சங்கரைப் போலவே ஐரோப்பிய நாடுகளில் விமானமோட்டும் பயிற்சிகளைப் பெற்ற மற்றும் ஒருவர் விடுதலைப் புலிகள் அமைப்பில் உள்ளார் என 1995இல் தெரியவந்தது. அந்த ஆண்டு வெளியான தகவல்களின்படி 1993இல் கிளிநொச்சியில் சிறிய விமான நிலையம் ஒன்றும் புலோப்பளையில் விமானப் படை முகாம் ஒன்றும் செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அரச விமானப்படை 1993இல் கிளிநொச்சியிலுள்ள விமான நிலையத்தையும் 1994இல் புலிகளின் விமானப்படை முகாமையும் தாக்கி அழித்தது எனச் செய்திகள் தெரிவித்தன. இருந்தபோதிலும் விடுதலைப் புலிகள் வான் வலுவைப் பெறும் எண்ணத்தைக் கைவிடவில்லை.

1995 ஜூன் 10ஆம் திகதி பிரான்ஸில் நடைபெற்ற சிறீலங்காவிலிருந்து புலம்பெயர்ந்தோரின் கூட்டத்தில் புலிகளின் அப்போதைய சர்வதேசத் தொடர்பாளராக விளங்கிய லோறன்ஸ் திலகர் புலிகளிடம் வான்வலு இருப்பதாகத் தெரிவித்தார். திலகரின் அந்தத் தகவலை உறுதிப்படுத்துவது போல அந்நாள்களில் லக்சம்பேர்க்கில் பிரான்ஸின் ஐரோப்பிய விவகாரம் தொடர்பாக அமைச்சர் மைக்கர் பேர்ணி என்பவர் பிரான்ஸில் விடுதலைப் புலிகள் இரகசியமாக 5 மைக்குறோலயிட் விமானங்களை கொள்வனவு செய்துள்ளனர் என சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் தெரிவித்தார் எனச் செய்திகள் தெரிவித்தன.

1995 நவம்பவர் 27ஆம் திகதி - விடுதலைப் புலிகளின் மாவீரர் வார இறுதி நாளன்று மாவீரர் துயிலும் இல்லத்தின் மீது விமானம் ஒன்று மலர் தூவியதைக் கண்டதாக வன்னியிலிருந்து வெளிவந்த தகவல்கள் தெரிவித்தன.

இந்தத் தகவலில் எவ்வளவு உண்மை உள்ளதோ இல்லையோ என்பது தெரியாவிடினும் விடுதலைப் புலிகளுக்காக விமானப் படைப் பிரிவை உருவாக்கும் நடவடிக்கைகளில் சங்கர் ஈடுபட்டுவந்தார் என்பது உண்மையே. சங்கர் இந்நோக்கில் தமது உறுப்பினர்களுக்கு பயிற்சிகளை வழங்கிவந்தார். கடந்த ஜூலை 24ஆம் திகதி கட்டுநாயக்கா விமானப்படைத்தளம் மற்றும் விமான நிலையம் மீது தாக்குதல்களை மேற்கொள்ள வந்த புலி உறுப்பினர்களிடையே விமானத்தைச் செலுத்தக்கூடியவரும் இருந்துள்ளார் என புலிகள் அமைப்புடன் தொடர்புடைய ஊடகவியலாளர் ஒருவர் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் எழுதியிருந்தார். புலிகளிடம் ஹெலிகொப்டர் ஒன்று உள்ளது எனப் புதிதாகவந்துள்ள தகவல் தெரிவிக்கிறது. புலிகளுடன் தொடர்புடைய 'இணையத்தளம்' ஒன்றே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

### விமானப்படைத் தளபதி

விமானப்படைப் பிரிவை உருவாக்கும் அனைத்து நடவடிக்கைகளிலும் பின்னணியிலிருந்து செயறபட்டவர் மூளைசாலியான சங்கரே ஆவார். புலிகள் அமைப்பின் உத்தியோகபூர்வமற்ற விமானப்படைத் தளபதியும் சங்கரே.

விடுதலைப் புலிகளின் சர்வதேச வர்த்தகத் தொடர்பானது ஒருவரால் இலகுவாகப் புரிந்துகொள்ள முடியாத அளவிற்குப் பரந்தது - சிக்கலானது - அந்தரங்கமானது.

சிம்பாப்வே நாட்டில் இருந்து சிறிலங்கா இராணுவத்திற்கு வந்து கொண்டிருந்த 32,400 மோட்டார்களை

(13ஆம் பக்கம் பார்க்க)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி

## நாகேந்திரன் கீர்த்தனா

(யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

அரியாலை நாகேந்திரன் – றதி தம்பதிகளின் புதல்வி 2001 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 170 உயர் புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் 3ஆம் இடத்தை பெற்றமையையிட்டு இவரை கல்வியில் மேலோங்கப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

இத்துடன் இதே குடும்பத்தைச் சேர்ந்த

திரு.திருமதி றஞ்சன் – அனுசியா தம்பதிகளின் புதல்வி **செல்வி ஆரணி** (163 புள்ளி)
(திருகோணமலை திருக்குடும்ப மகளிர் கல்லூரி)

திரு.திருமதி குலவீரசிங்கம் – லதா தம்பதிகளின் புதல்வி **செல்வி நிதர்சனா** (134 புள்ளி)
(பம்பலப்பிட்டி இராமநாதன் மகளிர் கல்லூரி) ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

*திருவண்ணபதி,*
*அல்வாய் வடக்கு, அல்வாய்.*

*சித்தப்பா:* **மா.மெய்யழகன்** (அதிபர்), *சித்தி:* மெ.சபிதா,
*தங்கை:* மெ.இங்கிதை.

(93536)

# வாழ்த்தும் பாராட்டும்



2001ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 128 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த அறுகுவெளி தனங்களப்பைச் சேர்ந்த யாழ்.சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மாணவன்

## ஆறுமுகராசா சுகேந்தன்

என்பவரின் வெற்றிக்கு அயராது உழைத்த கொற்றையூர் ஸ்ரடி சேக்கிள் கல்வி நிலைய நிர்வாகி, ஆசிரியர்களுக்கும், நெல்லியடி மெ.மி.க.க. பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தற்காலிக முகவரி:
*பொலிகண்டி மேற்கு,*
*பொலிகண்டி.*

நிரந்தர முகவரி:
*தனங்களப்பு, சாவகச்சேரி*

*பாராட்டுவோர்:*
***அன்பு அப்பா:*** செ.ஆறுமுகராசா,
தே.விவேகானந்தம் குடும்பத்தினர்,
*பொலிகண்டி.*

(93514)


# தேசிய போலியோ தடை மருந்து கொடுக்கும் தினம் - 20.10.2001

## யாழ்.மாவட்டம்

போலியோ நோயை முற்றாக இந்நாட்டிலிருந்து ஒழிக்க கடந்த ஆறுவருடமாக போலியோ சொட்டுமருந்து கொடுக்கப்பட்டு வருகின்றது. தென்னிலங்கையில் கூடிய முன்னேற்றம் காணப்பட்ட போதிலும் வட, கிழக்கு மாகாணங்களில் கீழ்க் குறிப்பிட்ட காரணங்களால் இதில் எதிர்பார்த்த முன்னேற்றம் காணப்படவில்லை.

1. காலத்திற்குக் காலம் மக்கள் இடம்பெயர்வதால் பிள்ளைகளைத் தேடிக் கண்டுபிடித்து மருந்து கொடுப்பதில் உள்ள சிரமம்.
2. இடம்பெயர்வு காரணமாக மக்கள் குறிப்பிட்ட இடங்களில் நெரிசலாக வாழ்கின்றபடியால் சுகாதாரத்தைப் பேணுவது குறைவாகக் காணப்படுகின்றது.

இக்காரணங்களால் வட, கிழக்கில் இந்நோய் மறைமுகமாக இருக்கலாமென ஐயப்பாடு உண்டு. எனவேதான் இவ்வருடமும் செப்ரெம்பர் 22 ஆம் திகதி முதலாம் சுற்று சொட்டுமருந்து வழங்கப்பட்டது. ஒக்ரோபர் 20 ஆம் திகதி இரண்டாம் சுற்று சொட்டு மருந்து வழங்கப்படவுள்ளது. செப்ரெம்பர் 22 ஆம் திகதி சொட்டு மருந்து பெற்றுக்கொண்ட சகல குழந்தைகளும் மீண்டும் ஒக்ரோபர் 20 ஆம் திகதியும் இச்சொட்டுமருந்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள கீழ்க் குறிப்பிட்ட நிலையங்களில் போலியோத் தடை மருந்து கொடுப்பதற்கான ஏற்பாடுகளை யாழ்.மாகாண பிரதிப் பணிப்பாளர் - சுகாதார சேவைகள் - மேற்கொண்டுள்ளார். இந்நிலையங்களில் காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை தடை மருந்து வழங்கப்படும். 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு முன்பு பல தடவைகள் கொடுக்கப்பட்டிருந்தாலும் இம்முறையும் இது கட்டாயமாகக் கொடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றது. நூற்றுக்கு நூறு வீதமான பிள்ளைகளுக்குத் தடை மருந்து கொடுப்பதன் மூலம் இக்கொடிய நோய் எமது பிள்ளைகளுக்கு வராமல் தடுப்பது மட்டுமல்லாது எம் நாட்டிலிருந்தே முற்றாக இந்நோயை ஒழித்துவிட முடியும்.

**சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ரீதியான சிகிச்சை நிலையங்களின் பெயர்ப் பட்டியல் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.**

### 01. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, தெல்லிப்பழை

01. ஆரம்ப சுகாதார நிலையம், தாவடி.
02. ம.ம., இணுவில்.
03. இணுவில் மத்திய கல்லூரி.
04. ம.ம., உடுவில்.
05. மல்லம் சேச்.
06. உடுவில் மேற்கு அந்திரான்.
07. இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்.
08. ம.ம., சுன்னாகம்.
09. யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.
10. ம.ம.ம.ம., அளவெட்டி.
11. ஆ.சு.நிலையம், சங்குவேலி.
12. மல்லாகம் சிகிச்சை நிலையம் (தெல்லிப்பழை).
13. ம.ம., புன்னாலைக்கட்டுவன்.
14. ம.ம., ஏழாலை.
15. மயிலங்காடு சிகிச்சை நிலையம்.
16. ஏழாலை மாதர் சங்கம்.
17. ஏழாலை பிரதேச சபை.
18. வசாவிளான் சிகிச்சை நிலையம்.
19. ஆ.சு.நிலையம், குளமங்கால்.
20. ஆ.சு.நிலையம், ஈவினை.
21. பன்னாலை சிகிச்சை நிலையம்.
22. நாவடி காளி கோயிலடி.
23. இணுவில் கலாஜோதி வாசிகசாலை.
24. கல்லாரை.
25. பன்னாலை.

### 02. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பருத்தித்துறை

01. சோளங்கன் சிகிச்சை நிலையம்.
02. மணியகாரன் தோட்டம் பாடசாலை.
03. ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை.
04. வல்லிபுரக்குறிச்சி கிராம அலுவலர் காரியாலயம்.
05. திக்கம் சிகிச்சை நிலையம்.
06. அல்வாய் பிரதேச சபை பணிமனை.
07. அத்தாய் விநாயகர் பாடசாலை.
08. வியாபாரிமூலை சிகிச்சை நிலையம்.
09. சென்.அன்ரனி சிகிச்சை நிலையம்.
10. மாதனை மாதர் சங்கம்.
11. கற்கோவளம் சிகிச்சை நிலையம்.
12. தம்பசிட்டி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம்.
13. பருத்தித்துறை மத்திய மருந்தகம்.
14. விக்கினேஸ்வரா சிகிச்சை நிலையம்.
15. வதிரி சிகிச்சை நிலையம்.
16. கப்பூது வாசிகசாலை.
17. நாவலட்டி மத்திய மருந்தகம் மகப்பேற்று மனை.
18. [illegible] கிராமம் சிகிச்சை நிலையம்.
19. விழலித் தோட்டம் வாசிகசாலை.
20. [illegible] சனசமூக நிலையம்.
21. கொயிற்கடமை சனசமூக நிலையம்.
22. அம்பிகை பாலர் பாடசாலை.
23. உடுப்பிட்டி சனசமூக நிலையம்.
24. பாரதி சனசமூக நிலையம்.
25. இலகடி சனசமூக நிலையம்.
26. இமையாணன் மாதர் சங்கம்.
27. கலைமகள் பாலர் பாடசாலை.
28. உடுப்பிட்டி பிரதேச சபை.
29. மாவட்ட வைத்தியசாலை, வல்வெட்டித்துறை.
30. வளர்மதி பாலர் பாடசாலை, தொண்டமனாறு.
31. கொற்றாவத்தை அ.த.க., பாடசாலை.
32. பொலிகண்டி இ.த.க., பாடசாலை.
33. கொற்றாவத்தை அ.மி.த.க., பாடசாலை.
34. வல்வெட்டி இ.த.க., பாடசாலை.
35. அம்பன் அ.ம.த.க., பாடசாலை.
36. மணற்காடு பாலர் பாடசாலை.
37. குடத்தனை சிகிச்சை நிலையம்.
38. பொற்பதி வாசிகசாலை.

### 03. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ்ப்பாணம்

01. சிறுவர் பூங்கா பாலர் பாடசாலை.
02. ஈச்சமோட்டை பாலர் பாடசாலை.
03. திருநகர் சனசமூக நிலையம்.
04. குருநகர் சிகிச்சை நிலையம்.
05. ஆ.வே. மாயா பாலர் பாடசாலை.
06. யூப்ளி மகப்பேற்று நிலையம் - 1.
07. யூப்ளி மகப்பேற்று நிலையம் - 2.
08. ஆயுர்வேதக் கல்லூரி.
09. போதனா வைத்தியசாலை.
10. கொட்டடி பாலர் பாடசாலை.
11. நாவலர் சிகிச்சை நிலையம்.
12. நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலை.
13. சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், கண்டி வீதி.
14. காந்தி சனசமூக நிலையம், அரியாலை.
15. ஞானக்குழந்தை பாலர்பாடசாலை, சிவப்பிரகாசம் வீதி.
16. வள்ளுவன் சனசமூக நிலையம், வண்ணார்பண்ணை.
17. அங்கர் பாமசி முன்.
18. கந்தர்மடம் சிகிச்சை நிலையம்.
19. செட்டித்தெரு சனசமூக நிலையம், நல்லூர்.
20. நல்லூர் சிகிச்சை நிலையம்.
21. மூத்தவிநாயகர் சனசமூக நிலையம்.
22. வண்ணார்பண்ணை சிகிச்சை நிலையம்.

### 04. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மானிப்பாய்

01. சுற்றயல் கூறு, சங்கானை.
02. ஆரம்ப சுகாதார நிலையம், பண்ணாகம்.
03. மத்திய மருந்தகம், தொல்புரம்.
04. ஐக்கிய சங்கப் பாடசாலை, சுழிபுரம்.
05. மத்திய மருந்தகம், வட்டுக்கோட்டை.
06. வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி.
07. கிராமிய வைத்தியசாலை, வட்டுக்கோட்டை.
08. அராலி தெற்கு சரஸ்வதி மகா வித்தியாலயம்.
09. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மானிப்பாய்.
10. கிராமிய வைத்தியசாலை, பண்டத்தரிப்பு.
11. மத்திய மருந்தகம், இளவாலை.
12. சனசமூக நிலையம், மாசியப்பிட்டி.
13. மானிப்பாய் லயன்ஸ் கழகம்.
14. சனசமூக நிலையம், சுதுமலை.
15. ஆரம்ப சுகாதார நிலையம், சாவற்கட்டு.
16. ஆரம்ப சுகாதார நிலையம், முள்ளி, ஆனைக்கோட்டை.
17. வை.எம்.சீ.ஏ., நவாலி.

### 05. சுகாதார வைத்திய அதிகாரி, சாவகச்சேரி

01. மிருசுவில் வடக்கு பாடசாலை.
02. கச்சாய் பிரதேச சபை.
03. மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்.
04. கைதடி வடக்கு அம்பிகா மாதர் சங்கம்.
05. கைதடி தெற்கு கமநல நிலையம்.
06. வரணி ம.ம.ம.ம.

### 06. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கோப்பாய்

01. இடைக்காடு சிகிச்சை நிலையம்.
02. சுற்றயல்கூறு அச்சுவேலி.
03. மத்திய மருந்தகம் புத்தூர்.
04. ஆரம்ப சுகாதார நிலையம், வாதரவத்தை.
05. சிறுப்பிட்டி சிகிச்சை நிலையம்.
06. அச்செழு சிகிச்சை நிலையம்.
07. நீர்வேலி சிகிச்சை நிலையம்.
08. ஊரெழு சிகிச்சை நிலையம்.
09. உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.
10. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கோப்பாய்.
11. மாதா கோவிலடி, இருபாலை.
12. கட்டப்பிராய் சிகிச்சா நிலையம்.
13. கல்வியங்காடு சைவப் பாடசாலை.
14. திருநெல்வேலி கலாமன்றம்.
15. மத்திய மருந்தகம், கொக்குவில்.
16. கிராமிய அபிவிருத்திச் சங்கம், கொக்குவில்.
17. மத்திய மருந்தகம் மகப்பேற்று மனை, கோண்டாவில்.
18. சூசையப்பர் கோவிலடி.
19. கிராமசபை, புத்தூர்.
20. ஆரம்ப பாடசாலை சைவத்தமிழ், உரும்பிராய்.
21. செருக்கப்புலம் அன்னங்கை சிகிச்சை நிலையம், கோண்டாவில்

### 07. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, ஊர்காவற்றுறை

01. மாவட்ட வைத்தியசாலை, ஊர்காவற்றுறை.
02. தம்பசிட்டி சனசமூக நிலையம்.
03. மெலிஞ்சிமுனை சேச்.
04. ஆரம்ப சுகாதார நிலையம், புளியங்கூடல்.
05. ஆரம்ப சுகாதார நிலையம், நாரந்தனை.
06. சுற்றயல்கூறு காரைநகர்.
07. களபூமி கிராம அலுவலர் காரியாலயம்.
08. வாரிவளவு ஆரம்பப் பாடசாலை.
09. சுற்றயல்கூறு அனலைதீவு.
10. ஆரம்ப சுகாதார நிலையம், எழுவைதீவு.
11. கிராமிய வைத்தியசாலை, வேலணை.
12. சாட்டி மாதா சேச்.
13. பராசக்தி வித்தியாலயம்.
14. மண்டைதீவு.
15. மாவட்ட வைத்தியசாலை, புங்குடுதீவு.
16. சுற்றயல்கூறு, நயினாதீவு.
17. மாவட்ட வைத்தியசாலை, நெடுந்தீவு.
18. நெடுந்தீவு மேற்கு - நிலையம்.
19. சுப்பிரமணியம் வித்தியாலயம்.

**மாகாண பிரதிப் பணிப்பாளர்,**
**சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்**

(C/18738)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**NEW BRIGHT EDUCATION CENTRE (J/Martin Road)**

*எமது நிறுவனத்தில் கல்வி பயின்று 2001 - 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

| | | | |
|---|---|---|---|
| ★ இ.சேருலாதன் | 152 | ★ வோ.துஷாந்தினி | 135 |
| ★ து.வினித்திரா | 149 | ★ இ.உஷாணி | 130 |
| ★ அ.வஜீரன் | 147 | ★ மொ.மொறிஸ்றெலா | 128 |
| ★ த.பௌசனா | 146 | ★ யோ.ஜனார்த்தனன் | 125 |
| ★ த.கிருபாளினி | 142 | ★ ச.மதுஷணன் | 124 |

இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

குறிப்பு:- 2002ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கான வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன.

(C/18735)

# பிரிவுத் துயர் பகிர்கின்றோம்

எமது குடும்ப நண்பனும் பெரியபுலம் ம.வி. மேலதிக அதிபருமான

**திரு.க. கனகசிங்கம்**

அவர்களின் அன்புத் துணைவியார்

## சுபத்திராதேவி கனகசிங்கம்

காலமான செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**- நேரு மாஸ்ரர் குடும்பம்.**

*11A, முதலாவது சப்பல் வீதி,*
*கொழும்பு - 06*

(C/18743)

# கண்ணீர் அஞ்சலி

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில்
எம்முடன் கடமையாற்றிய
முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர்

**திரு.க.கனகசிங்கம்**

அவர்களின் அன்பு மனைவி

## திருமதி சுபத்திராதேவி கனகசிங்கம்

16.10.2001இல் அமரத்துவம் அடைந்ததையிட்டு நாம் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகம்,**
**யாழ்ப்பாணம்.**

(C/18730)

# 31ஆம் நாள் நினைவுடன்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17 - 02 - 1961 | 17 - 09 - 2001 |

## திருமதி தவமணி துரைச்சாமி

**அன்புக்கினியவளே! ஆறவில்லை என்மனம்,**
**நெஞ்சம் கனக்குதம்மா, நிலைகெட்டுத் தவிக்குதம்மா!**
**பிஞ்சு மழலைகள் இங்கு பதறி அழுகின்றதம்மா!**
**நிழல் தந்த விருட்சம் வேரோடு சாய்ந்ததுவோ?**
**இறைவனின் பாதத்தில் சேர்ந்து நீடூழி வாழ்க.**

எங்கள் அன்பு மனைவியின் மறைவை அறிந்து, உடன் வந்து ஆறுதலளித்த அன்பு, நெஞ்சங்களுக்கும், அஞ்சலி செலுத்தியோருக்கும் எமக்குப் பல வழிகளில் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*காளிகோவிலடி,*
*சங்கானை.*

**கணவன், பிள்ளைகள், குடும்பத்தினர்.**

(93546)

மறைந்த பத்திரிகையாளர்

# மயில்வாகனம் நிமலராஜன் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள்



காலம்:- **இன்று (17.10.2001) புதன்கிழமை பி.ப.2.30 மணி (பு.நே.)**
இடம்:- **யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு**

## நிகழ்ச்சி நிரல்

1) நினைவுச் சுடர் ஏற்றல்
2) நினைவுரைகள்
3) சிறப்புரை
   **"பன்முகப் பார்வையில் நிமலராஜனின் செய்திக் கட்டுரைகள்"**
   வழங்குபவர்- **எஸ்.பெருமாள்** (முன்னாள்ஆசிரியர், ஈழநாடு.)
4) நினைவுப் பேருரை
   **"இனவாத யுத்தமும் ஊடகங்களின் செயற்பாடுகளும்"**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**- நிமலராஜன் ஞாபகார்த்த அமைப்பு.**

(C/18734)

# விடுதலைப் புலிகளின்....

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தந்திரமாகப் 'பிக்பொக்கற்' அடிப்பது போல் அபகரித்துக்கொண்டனர். அவ்வளவு தூரம் விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச வர்த்தகத் தொடர்புகள் உள்ளன.

இந்தச் சர்வதேச கொடுக்கல் வாங்கல்களை ஆரம்பித்தவர் சங்கரே ஆவார்.

இந்தக் கொடுக்கல் வாங்கல்கள் காரணமாகவே உலகில் பிரபலமாக விளங்கும் விடுதலைப் புலிகளின் முக்கிய விநியோகத்தரான குமரன் பத்மநாதன் அல்லது கே.பிக்கு உரிய இடங்களைச் சங்கரால் அறிமுகப்படுத்த முடிந்தது.

விடுதலைப் புலிகளுக்கு சங்கரின் தொழில்நுட்ப அறிவும் அவரிடமுள்ள ஒழுங்கமைக்கும் ஆற்றலும் மட்டும் போதுமானவை அல்ல. அவர் பிரபாகரன் மீது பேரன்பு கொண்டிருந்தார்.

இலங்கை - இந்திய சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி பிரபாகரனை புதுடில்லிக்கு அழைத்தார். விடுதலைப் புலிகள் அதற்கு உடன்பட்ட போதிலும் இந்தியத் தலைமை மீது அவர்கள் சந்தேகம் கொண்டனர்.

1987 ஜுலை 27ஆம் திகதி பிரபாகரனை புதுடில்லி அழைத்துச் செல்ல ஹெலிகொப்டர் ஒன்று யாழ்ப்பாணத்தில் சுதுமலை என்ற இடத்திற்கு அனுப்பப்பட்டது. அந்தக் ஹெலியில் பிரபாகரன் ஏறியபோது இந்தியத் தூதரகத்தைச் சேர்ந்த அரசியல்துறைச் செயலர் ஹர்தீப் பூரியிடம் சங்கர் பின்வருமாறு தெரிவித்தார்:-

"நீங்கள் தமிழீழத்தின் ஆத்மாவை அழைத்துச் செல்கிறீர்கள். அவருக்கு ஏதாவது நடக்குமாயின் இங்கு எதுவும் மிச்சமாயிராது என்பதை நினைவில் வைத்திருங்கள்" எனத் தெரிவித்தார். சங்கரின் சகோதரர்களான மனோகரன், வசீகரன், உதயகுமார் ஆகிய மூவரும் இராணுவத்துடனான மோதல்களில் பலியாகினர். மற்றொரு சகோதரரான ஸ்ரீதரன் விமானக் குண்டு வீச்சுக்குப் பலியானார்.

தமிழீழத்திற்காக சங்கரின் குடும்பத்தினரின் அர்ப்பணிப்புகள் இவற்றிலிருந்து வெளியாகின்றன. சங்கரின் மரணம் விடுதலைப் புலிகள் அமைப்பினர் மத்தியில் பாரிய துயரத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால் அதேநேரம் அரச தரப்பினர் தமது தரப்பினரின் மனோதிடத்திற்கு வலுவூட்டவோ அல்லது எதிர்த்தரப்பினரின் (புலிகளின்) மன உறுதியைக் குழப்பவோ இந்தச் சம்பவத்தை ஏன் பயன்படுத்தவில்லை என்பது கேள்விக்குரியதாகும்.

சங்கர் யாரால் படுகொலை செய்யப்பட்டார்?

புலிகள் அமைப்பின் உள்ளக வேலையே இது என இராணுவம் தெரிவிக்கிறது. ஆனால் இராணுவத்தைச் சேர்ந்த கொமாண்டோக்கள் ஆழமாக ஊடுருவி (Deep Penetrating) இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் எனப் புலிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த வருட ஆரம்பத்தில் இருந்தே புலிகள் அமைப்பைச் சேர்ந்த முக்கியஸ்தர்களை இலக்குவைத்து புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதிகளில் இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெற்று வருக்கின்றன. இத்தகைய சம்பவங்கள் இடம்பெறும் போது அவை இராணுவக் கொமாண்டோக்களால் மேற்கொள்ளப்பட்டவை என விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

கடந்த பெப்ரவரி 20ஆம் திகதி 60பேர் அடங்கிய சர்வமதக் குழு ஒன்று வன்னி சென்றது. அந்தக் குழுவினர் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களைச் சந்தித்த பின்னர் மீண்டும் திரும்பியபோது மடுப் பிரதேசத்தில் அவர்களது வாகனம் கிளைமோர்த் தாக்குதலுக்கு உள்ளானது. இருப்பினும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. அந்தத் தாக்குதலானது விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் தமிழ்ச்செல்வனை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் எனப் புலிகள் தெரிவித்தனர். அந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றுவது தொடர்பான முடிவை தமிழ்ச்செல்வன் இறுதி நேரத்தில் மாற்றியிருந்தார்.

மே மாதம் 16ஆம் திகதி நோர்வேத் தூதுக்குழுவினரைச் சந்திக்க தமிழ்ச்செல்வன் மல்லாவி நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது அவரது வாகனத்துக்கு முன்பாக கிளைமோர்க் குண்டு வெடித்தது. அவருக்குப் பாதுகாப்பாக முன்னால் சென்ற வாகனத்தில் இருந்தோர் கொல்லப்பட்டனர். விடுதலைப் புலிகளின் அம்பாறை - மட்டக்களப்பு மாவட்டப் பொறுப்பாளர் நிஷாமின் மோட்டார் சைக்கிள் மட்டக்களப்பில் நல்ல தண்ணீர்ஓடை என்ற இடத்தில் கடந்த ஜுன் 15ஆம் திகதி கிளைமோர்த் தாக்குதலில் சிக்கியது. நிஷாம் பலியானார்.

இந்தத் தாக்குதல் தொடர்களின் முக்கிய தாக்குதல் ஒன்றில் சங்கர் பலியானார்.

விடுதலைப் புலிகள் கூறுவது போல் இந்தத் தாக்குதலை இராணுவத்தினரே மேற்கொள்ளுகிறார்கள் எனில் இது ஸ்ரீலங்கா இராணுவத்தின் முன்னேறிப் பாய்தலாய் அமையும். புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் 30, 40 மைல் தூரம் இவ்வாறான தாக்குதல்களை மேற்கொள்வதற்கு ஊடுருவிச் செல்வதாயின் அது பெரும்பாலும் திரும்பி வர முடியாத பயணமாகவே அமையும்.

மறுபுறத்தில் தற்போது விடுதலைப் புலிகளும் மீண்டும் தென் பகுதித் தலைவர்களைப் படுகொலை செய்ய கடும்முயற்சிகளில் இறங்கக் கூடும் என்பதே சில விமர்சகர்களின் கருத்தாகும்.

☆


# கடைக்கு ஆள் தேவை

யாழ்நகரிலுள்ள பிரபல்யம் வாய்ந்த, அழகுசாதனப் பொருள்கள் விற்பனைசெய்யும் கடைக்கு ஆள் தேவை. இருபாலாரும் விரும்பத்தக்கது.

தொடர்பு:
விளம்பர இலக்கம்: 1380
மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

(93532)

# ராஜா யாழ்ப்பாணம்

விஜய், சிம்ரன்
நடித்த

## ப்ரியமானவளே

தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2.5 (புதிய நேரம்)

(C/18719)

# நாகம்ஸ் சுன்னாகம்


இன்று முதல்

## THE PLOT

(ரீல்ஸ்)
இதுவரை கண்டிராத ஆண்கள்.
பெண்களுக்கிடையிலான விறுவிறுப்பான
கராட்டிச் சித்திரம்
காட்சிகள்:- 11.00, 2.30, 5.30
(புதியநேரம்)

(93525)


# சேவை நலன் பாராட்டு விழா



காங்கேசன் சிமெந்து
தொழிற்சாலை, சிமெந்து பொதுத்
தொழிலாளர் யூனியன் முன்னாள்
தலைவர் "வர்க்கநேசன்"

## பொன்.தங்கராசா

அவர்கள் சுயவிருப்பில் ஓய்வு பெறுவதையிட்டு அவரின் தன்னலமற்ற சேவையைக் கௌரவிக்கும் முகமாக, தங்கப்பதக்கம் அணிவித்து கௌரவிக்கும் விழா உரும்பிராயில் அமைந்துள்ள தொழிலகத்தில் ஊழியர்களாலும் உத்தியோகத்தர்களாலும் இன்று நடத்தப்படுகின்றது.

(93528) **கொங்கிறீட் பகுதி ஊழியர்கள்.**

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுபத்திராதேவி கனகசிங்கம்

*(ஆசிரியை யா/இந்து மகளிர் கல்லூரி)*

திருவாட்டி சுபத்திராதேவி காலமானார்.

அன்னார் க.கனகசிங்கம் (மேலதிக முதல்வர், யாழ்.பெரியபுலம் ம.வி) அவர்களது அன்புத் துணைவியாரும், சபாரத்தினம், திருவாட்டி மங்கையர்க்கரசி சபாரத்தினம் ஆகியோரின் மகளும், திருவாட்டி நிர்மலாதேவி இராமச்சந்திரன் (ஆசிரியர் விசுவமடு மகாவித்தியாலயம்), திருவாட்டி சரோஜினிதேவி, காலஞ்சென்ற இரத்தினேஸ்வரன், Dr.ஜெயக்குமார் (கண்டி மருத்துவமனை), திருவாட்டி மிரமிளா ஜோர்ஜ் (பிரான்ஸ்), திருவாட்டி சாந்தி கந்தசாமி (ஜேர்மனி), ஆகியோரின் உடன் பிறப்பும், செல்வி க.சின்னத்தங்கம், திருவாட்டி இராசமணி (ஆசிரியர்), திருவாட்டி கணேசம்மா பேரின்பநாதன் (ஜேர்மனி), திரு.க.மோகனசுந்தரம், திரு.க.திருச்செல்வம் (ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அண்ணியும் ஆவார்.

இறுதி நிகழ்ச்சிகள் இன்று (17.10.2001) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று உடல் எரியூட்டுவதற்காக மு.ப. 11.00 மணிக்கு கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*01, பழம் வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
**க.கனகசிங்கம்**
*(துணைவர்)*

(C/18742)

## கார்த்திகேசு இராசலிங்கம்

பனிப்புலம் பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு இராசலிங்கம் நேற்று (16-10-2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான கார்த்திகேசு - சின்னமாவின் அன்பு மகனும் பூபதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசையா மற்றும் பொன்னம்மாவின் அன்பு மருமகனும், மங்களேஸ்வரி, குணதீஸ்வரன் (உரிமையாளர் அபிராமி புடைவையகம், சங்கானை) ஜெகதீஸ்வரி (சுவிஸ்), நவதீஸ்வரி (U.K), நகுலேஸ்வரன் (ஜேர்மனி), குலதீஸ்வரன் (சுவிஸ்), ராஜேஸ்வரன் (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், பண்டிதர் சிவபாதம் (சிமெந்துக் கூட்டுத்தாபனம்), புலேந்திரன் (சுவிஸ்), ராஜலிங்கம் (U.K) ஆனந்தரூபி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், திருச்செந்தூர், சிவரஞ்சனி, பதுர்சிகா, டற்சன், டருசன் (சுவிஸ்), அபிநயா (U.K) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2001) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்பிஸ்துறை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பனிப்புலம்,*
*பண்டத்தரிப்பு.*

தகவல்:
**குணதீஸ்வரன்**
*(மகன்)*
*(அபிராமி புடைவையகம், சங்கானை)*

(C/18741)

## கல்முனையில் பொலீஸாருக்கு வந்த கடிதத்தில் குண்டு!

கொழும்பு,ஒக்.17

கல்முனை பொலீஸ் நிலையத்துக்கு விலாசமிடப்பட்டு வந்த கடிதக் குண்டு ஒன்றை நேற்றுப் பொலீஸார் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்துள்ளனர்.

கல்முனை பொலீஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலீஸார் ஒருவரின் விலாசம் இடப்பட்டிருந்த ஒரு கடிதத்தின்மீது சந்தேகம் கொண்ட கல்முனை தபால் நிலைய அதிகாரிகள் அது பற்றிப் பொலீஸாருக்கு அறிவித்தனர்.

உடனடியாக தபால் நிலையத்துக்கு விரைந்த பொலீஸார் அந்தக் கடிதஉறையைப் பிரித்துப் பார்த்த போது அதற்குள் சிறிய குண்டு ஒன்று வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு பிடித்தனர்.

உடனடியாக அந்தக் குண்டை பொலீஸார் செயலிழக்கச் செய்தனர்.

(ஐ-4)

# ஜி.எல்.பீரிஸுக்கு வழங்கப்பட்ட கொமாண்டோ பாதுகாப்பு வாபஸ்!

## மனித உரிமைக்குழுவிடம் அவர் முறைப்பாடு

கொழும்பு,ஒக்.17

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறி ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துள்ள முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பரிஸின் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வந்த 78விசேட அதிரடிப்படைக் கொமாண்டோக்களில் 76பேர் அப்பணியில் இருந்து நீக்கப்பட்டிருக்கின்றனர்.

தனக்கு வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டிருப்பது குறித்து ஜி.எல்பீரிஸ் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைபபாட்டு மனு ஒன்றைச் சமர்ப்பித்திருக்கிறார்.

எனவே இந்த விடயத்தில் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் அவர் கேட்டிருக்கிறார்.(ஐ-3)

## சடலங்கள் ஒப்படைப்பு

திருகோணமலை,ஒக்.17

திருகோணமலை பள்ளந் தோட்டம் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் தாக்குதலில் உயிரிழந்த விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் மூவரின் சடலங்களை நேற்று செஞ்சிலுவை சர்வதேசக் குழு ஊடாக புலிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன. (ஐ-4)

## திஸநாயக்காவின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வசதிகள் கொண்ட வீட்டை அமைதது வருவது பற்றி கடந்த காலங்களில் மௌனமாக இருந்து வந்த அரசு, தற்போது அவர் அரசில் இருந்து விலகியதை அடுத்து இந்த விவகாரத்தை அவருக்கு எதிரான பிரசாரத்துக்குப் பயன்படுத்தத் தொடங்கி இருப்பதாக எதிர்க்கட்சி வட்டாரங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன. (ஐ-3)

## ஓரணியாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடுக்க வேண்டுமாயின் தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்டவர்கள் யாவரும் ஒரே சின்னத்தின் கீழ போட்டியிட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

தமிழ் மக்களின் இந்த இக்கட்டான நிலைக்குத் தீர்வு காண வேண்டுமாயின் தமிழ்மக்களின் நலனில் அக்கறையுள்ளவர்கள் தம்மிடையே உள்ள கருத்து வேறுபாடுகளை மறந்து ஒன்றுசேருமாறு மாணவர் ஒன்றியம் வேண்டிக் கொள்கின்றது.

இந்தத் தேர்தலில் தமிழ்மக்களின நலன்களில் அக்கறையுள்ள கட்சிகள் யாவும் ஒன்றுசேரும் பட்சத்தில் பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் இந்தக் கூட்டுக் கட்சிக் கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்குவது குறித்து பரிசீலிக்கத் தயாராக இருக கின்றோம் - என்றுள்ளது. (ஐ-3)

## 3 படையினர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும் விடுதலைப் புலிகளின் அணி ஒன்றுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் ஓர் அதிகாரியும் மூன்று படையினரும் காயமடைந்ததாக விசேட ஊடகத தகவல் நிலையம் அறிவித்திருக்கிறது.

இந்த மோதலில் விடுதலைப் புலிகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் தகவல் நிலையம் தெரிவிததது.

(ஐ-3)

## பல்கலைக்கழக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'செய்திக் கட்டுரைகள்' என்ற தலைப்பில் மூத்த பத்திரிகையாளர் எஸ். பெருமாள் சிறப்புரை ஆற்றுவார்.

'இனவாத யுத்தமும் ஊடகங்களின் செயற்பாடுகளும்' என்ற தலைப்பில் நினைவுப் பேருரை இடம்பெறும்.

நிமலராஜன் ஞாபகார்த்த அமைப்பினால் நடத்தப்பட்ட கட்டுரை, கவிதைப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வும் அங்கு இடம்பெற இருக்கின்றது.

போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:-

★ கட்டுரை- சி.இரத்தினம் (புலோலி), என்.ஆர்.மகேந்திரன் (திருகோணமலை), க.நிருபன் (கோப்பாய் தெற்கு).

★ கவிதை - செல்வி இ.சிவராகினி (கரவெட்டி கிழக்கு), செல்வி பிரேமினி சபாரத்தினம் (தூட்சாயினி - கரவெட்டி).

(ஐ-3-10)

## புலிகளின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தது. அவ்விடத்தில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரின் சடலத்தையும் துப்பாக்கி, கிளைமோர் கண்ணி என்பனவற்றைப் படையினர் மீட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

வெலிஓயாவில் பராக்கிரமபுர முன்னரங்கக் காவலரண்களுக்கு இடையே தாங்கள் நடத்திய கிளைமோர்த் தாககுதலில் படையினர் மூவர் பலியானதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த 12 ஆம் திகதி மணலாற்றுப் பகுதியில் படையினருடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலில் உயிரிழந்த லெப்டினன்ட் மலர்க்கொடி, இரண்டாம் லெப்டினன்ட் கலையரசன ஆகியோர் நினைவாக இத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் -

இதன் போது ரி-56 இரண்டு ரகத் துப்பாக்கி - 1, ரவைகள் - 30, ரவைக கூடு -1 என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் புலிகளின் குரல் வானொலி தனது செய்தியறிக்கையில் தெரிவித்தது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைக்கும் கேந்திர முக்கியத்துவம் மிக்க எல்லைப் பகுதியான வெலிஓயாவில் புலிகளின் தாக்குதல்கள் திடீரென அதிகரித்திருப்பது பாதுகாப்பு வட்டாரங்களால் கவனத்துக்கு எடுக்கப்பட்டு அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக செய்திகள் தெரிவித்தன.

(ஐ-3-4)


தேவை
கரன் பிரின்ரேர்ஸ்
நிறுவனத்திற்கு
தமிழ், ஆங்கில Typing முன் அனுபவமுள்ளவர்கள், 20.10.2001 (சனிக்கிழமை) காலை 9 - 11.30 மணிக்கு முன்னதாக சுயவிவரங்களுடன் வருகைதரவும்.
303, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி. (93537)

எமது புதிய வீடியோ CD வெளியீடு
அமெரிக்கா அமெரிக்கா
அசோக வனம்
ரோசி
பிரதிகளை உடன் பெற்றுக் கொள்ளலாம்.
ஓடியோ வீடியோ CDகளின் மலிவு விற்பனை 20ஆம் திகதி வரை.
அஸ்டி
எலக்ரோனிக்ஸ்
15,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/18744)

எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்
☆ ரோசி
☆ அமெரிக்கா அமெரிக்கா
☆ அசோக வனம் (93542)
விஷ்ணு வீடியோ
கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில்.

வெளிவந்துவிட்டது
O/L 2001
மாணவர்களுக்கான புதிய பாடத்திட்டத்திற்கு அமைவான
சமூகக்கல்வியும் வரலாறும்
(தரம் 11)
தொகுப்பு:-
ஆசிரியர் S.குகதாஸ்
சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும் (93515)

எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்
லிவிங்டன் நடித்த
அசோக வனம்
நெப்போலியன், சுரேஸ்கோபி நடித்த
ரோசி
ரமேஸ், அரவிந் நடித்த
அமெரிக்கா அமெரிக்கா
பிரதிகள் உடன் பெறலாம்.
வீடியோ விமல்
யாழ்ப்பாணம். (C/18745)

புதிய தீபாவளி வாழ்த்து மடல்கள்
விற்பனையாகின்றன
பல வர்ண டிசைன்களில் பல்வேறு வகையான அளவுகளிலான வாழ்த்து மடல்கள்
சுவாமி, சினிமா, போஸ்காட்
2002ஆம் ஆண்டுக்கான பொக்கட் கலண்டர்.
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
ஸ்ரீகாந் புத்தகசாலை
இல. 165, மின்சார நிலைய வீதி,
பஸ் நிலையம் முன்பாக
யாழ்ப்பாணம். (C/18737)
மக்மிலன் புத்தகசாலை
இல. 3, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

WE ARE MARKETING THE FOLLOWING PRODUCTS TO THE LOCAL CONSUMERS IN THE JAFFNA PENINSULA
(1) CHCORIME POWDER
(2) INSECTICIDE POWDER
(3) "BINGO" CLEANING POWDER
(4) DISINFECTANT
(5) WOOD PRESERVATIVE
S.MAHADEVAN
Managing Director
JAYANTHY ENTERPRISES
Agents & Distributors
Marketing Consultants
MARKET LANE,
AVARANKAL-PUTTUR P.O. (N.P.)
Red.No,10880 (93519)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மணே நமஹ
பூப்புனித நீராட்டுவிழா அழைப்பு
அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான விஷு வருடம் ஐப்பசி மாதம் முதலாம் திகதி நாளை (18-10-2001) வியாழக்கிழமை பகல் 10.22 முதல் 12.18 வரையில் வரும் தனு லக்கின சுபமுகூர்த்த வேளையில்
எமது சிரேஷ்ட புதல்வி திருவளர் செல்வி
"தர்ஷிகா" அவர்களுக்கு
பூப்புனித நீராட்டுவிழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இதனைத் தனிப்பட்ட அழைப்பாக அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
வரவேற்பாளர்கள்:
திரு.திருமதி நடராசா வரதராஜா பத்தர் (குடும்பம்) உரும்பிராய், (பெரியப்பா)
திரு. திருமதி சீனிவாசகம் பாலகிருஸ்ணன் (குடும்பம்)சங்குவேலி, (பேரன்)
இல.54, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(கோல்ட் லேக்ஸ் - தொமினிக்கேசன்)
தொலைபேசி இல : 021 - 3432
தங்கள் நல்வரவை நாடும்:
நடராசா கோவிந்தராசா - பேரின்பராணி
குடும்பத்தினர். (93506)

விசேட விலைக்கழிவில்
Computer
PRINTERS
HP INKJET 640C
EPSON COLOUR INKJET480
EPSON LX 300+
CANNON BJC 1000C
SCANNERS
ACCER 640
HP 3300C
எமது விலையில் குறைப்பில் ... சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
நவம்பர் 10ம் திகதி மட்டுமே
Institute of Informatics Studies
No. 100, Clock Tower Road, Jaffna.
☎ 021-2821

வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி....!
பிறிமா மா இறக்கும் பணி இன்று (17-10-2001) புதன்கிழமை ஆரம்பிப்பதால் வாடிக்கையாளர்களை உடன் தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.
V.S.B. ஸ்ரோர்ஸ்
T.P. - 2653 277, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/18729) FAX - 2140


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.10.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.